பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை 25.12.2018 கதிர் 50

## இது ரகசியம் அல்ல!

'வினை விதைப்பவன் வினை அறுப்பான்' என்பார்கள்.

ஐக்கியதேசியக்கட்சியின் அமைச்சர் ரவி கருணாநாயக்கா இப்போது பொருமுகின்றமையைப் பார்க்கும் போது இந்த மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

நிதி அமைச்சர் பதவி தமக்குக் கிடைக்காதமைக்கு பக்கம் 02 »

### யாழ். ஆயர் நத்தார் செய்தியில் கோரிக்கை

# தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பணயம் வைத்து அரசியல் செய்யாதீர்!

### தீர்வுக்கு இதுவே உகந்த காலம்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

"தமிழ் மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பணயம் வைத்து அரசியல் நடத்தாதீர்கள் எனத் தமிழ் அரசியல்வாதிகளிடமும் தமிழ் அரசியல் கட்சிகளிடமும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் பெயரால் அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறோம். தயவு செய்து தமிழ் மக்கள் நலனுக்காக உங்கள் அரசியல் லாபங்கள் அனைத்தையும் தியாகம் செய்யுங்கள்!"

- இவ்வாறு தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார் யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை. பக்கம் 11 »

## 27 இல் இறுதி முடிவு!

### சிறிகொத்தாவில் கூடுகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ. 25

ஐக்கிய தேசியக்கட்சியின் விசேட மத்தியசெயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவரான ரணில் பக்கம் 11 »

## கட்சிக்கு உள்ளேயே எனக்கு கழுத்தறுப்பு

### மனம் திறந்தார் ரவி

கொழும்பு, டிசெ. 25

கட்சிக்குள்ளேயே தனக்கு கழுத்தறுப்பு நடந்ததாலேயே நிதி அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்று ஐ.தே.கவின் பக்கம் 11 »

## வெள்ளம் பாதித்த குடும்பங்களுக்கு முதற் கட்டமாகப் 10 ஆயிரம் ரூபா!

### இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாட்டங்களில் வெள்ள இடர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பக்கம் 11 »

## வெள்ளத்தில் மூழ்கிய பகுதியில் தாயும் கைக்குழந்தையும் மீட்பு!



கிளிநொச்சி, டிசெ. 25

வெள்ளத்தில் சிக்கிய பகுதியில் இருந்து பிறந்து சில நாள்களேயான சிசுவும், தாயும் கடற் பக்கம் 11 »

## அரசியல் கைதிகளின் விடுதலை விரைவில்!

கொழும்பு, டிசெ. 25

அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்ந்து, விடுவிக்கக் கூடியவர்களை விரைவில் விடுவிக்க எதிர்பார்த்துள்ளதாக தபால் சேவைகள் பக்கம் 11 »

## வெள்ள நிவாரணம் இல்லை வடமராட்சி மீனவர் கவலை!

யாழ்ப்பாணம், டிசெ. 25

கடந்த இரண்டு வார காலமாக நிலவும் சீரற்ற காலநிலை காரண மாகதாம் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிறார் எனவும், தமக்கு இதுவரை எந்த நிவாரணங் பக்கம் 11 »

## இடரால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்வையிட்டார் அமைச்சர்



கிளிநொச்சி, டிசெ. 25

திடீரென ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன.

கடும் பக்கம் 11 »

## கடன் பெற்றுப் பயிர் செய்தும் அவை வெள்ளத்தினால் அழிவு

### வன்னி விவசாயிகள் அமைச்சரிடம் முறைப்பாடு



கிளிநொச்சி, டிசெ. 25

கடன்களைப் பெற்று விவசாயத்தை செய்த போதும் அவை வெள்ளத்தினால் அழிவடைந்ததால் தமதுவாழ்வாதாரம்முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வெள்ளத் பக்கம் 11 »

## தேவையான நிதி விடுவிக்கப்படும்

### கிளிநொச்சியில் அமைச்சர் உறுதி



கிளிநொச்சி, டிசெ. 25

வெள்ள இடரால் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் கோரிய பக்கம் 11 »




## மைத்திரிபால - மங்கள இடையே உடன்பாடு

கொழும்பு, டிசெ. 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகி பக்கம் 02 »

சசிகா லேணர்ஸ் THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை DS NO - 822

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOT LINE: 077 722 6247
021 221 7678, 077 614 0361

sasika learners
sasikadrivingschool@gmail.com

அனைவருக்கும் எமது இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்...!

கிளை நிறுவனங்கள்:

வேலணை 021 221 5472, 070 301 3012
மல்லாகம் 021 224 3393, 070 301 3014
சங்கானை 021 225 1664, 070 301 3016
பண்டத்தரிப்பு 021 225 2333, 071 255 4135

யாழ்ப்பாணம் (Town)
இல.281C, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 222 8004, 070 301 5004

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.

# வடக்கில் 74 ஆயிரம் பேர் அனர்த்தத்தினால் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25
வடக்கின் ஐந்து மாவட்டங்களி லும் ஏற்பட்டுள்ள வெள்ளத் தினால், 23 ஆயிரத்து 54 குடும் பங்களைச்சேர்ந்த 73 ஆயிரத்து 851 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

3 ஆயிரத்து 698 குடும்பங் களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 310 பேர் இடர்பெயர்ந்து 39 இடைத் தங்கல் முகாங்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 39 ஆயிரத்து 932 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட் டம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 12 ஆயிரத்து 652 பேர் வெள்ள இடரால் பாதிக் கப்பட்டுள்ளனர் என்றும் மத் திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணிவரையான நிலவரப்படி இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இந்த விவரம் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது: –

**முல்லைத்தீவு**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 466 குடும் பங்களைச்சேர்ந்த 4 ஆயிரத்து 724 பேர் வெள்ள இடரால் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் 163 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து548பேர்இடர்பெயர்ந்து 3 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செய லர் பிரிவில் 3 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 468 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 37 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 817 பேர் இடம்பெயர்ந்து 10 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 3 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயி ரத்து 460 பேர் பாதிக்கப்பட்டுள்ள னர். பிரதேசத்தில் 3 வீடுகள் முழுமையாகவும் 3 வீடுகள் பகுதி யளவிலும் சேதமடைந்துள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செய லர் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த81பேர்பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சி**

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 778 குடும் பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 724 பேர் வெள்ள இடரால் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் 436 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 428 பேர் 5 இடைத் தங்கல் முகாங்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 20 வீடுகள் முழு மையாகவும் 98 வீடுகள் பகுதி யளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 520 குடும் பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 512 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 929 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 75பேர் இடம்பெயர்ந் துள்ளனர். அவர்கள் 15 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர்.

பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 103 வீடுகள் பகுதியளவிலும் சேத மடைந்துள்ளன.

பச்சிளைப்பள்ளி பிரதேச செய லர் பிரிவில் ஆயிரத்து 819 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 156 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

அவர்களில்100குடும்பங்களைச் சேர்ந்த 347 பேர் 4 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத் தால் 108 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**மன்னார்**

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள் ளனர். அவர்கள் அனைவரும் ஓர் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

**யாழ்ப்பாணம்**

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 257 குடும் பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 642 பேர் வெள்ள இடரால் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் ஒரு தற்காலிய முகாமில் தங்கி யுள்ளனர். கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

**வவுனியா**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 132 குடும்பங் களைச்சேர்ந்த 455பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதேசத்தில் 2 வீடு கள் பகுதியளவில் சேதமடைந் துள்ளன.

# போக்குவரத்துக் கட்டணங்கள் நாளை நள்ளிரவு முதல் குறையும்

நாளை 26 ஆம் திகதி நள் ளிரவு முதல் பஸ் கட்டணங்கள் குறைக்கப்படவுள்ளன.

கடந்த தினங்களில் ஏற்பட்ட எரிபொருள் விலை மாற்றத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனப் போக்கு வரத்து அமைச்சர் அர்ஜுன ரண துங்க தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் பஸ் கட்டணங்கள் நூற்றுக்கு 4 வீதத் தால் குறைக்கப்படவுள்ளன.

குறைந்த பட்ச கட்டணங்களில் எவ்வித மாற்றமும் இல்லை.

இதேவேளை, ஓட்டோ கட்டண மும் குறைக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் ஆரம்ப கட்டணம் 10 ரூபாவால் குறைக் கப்படவுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனவே, 60 ரூபாவாக இருந்த ஆரம்ப கட்டணம் 50 ரூபா வரையில் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலை மாண வர்களுக்கான போக்குவரத்துக் கட்டணமும் குறைக்கப்படவுள் ளது எனவும் அமைச்சர் அறி வித்துள்ளார்.

நூற்றுக்கு 3 வீதத்தால் இந் தக் கட்டணங்கள் குறைக்கப்பட வுள்ளன.

இந்த அனைத்துக் கட்டணங் களும் நாளை 26ஆம் திகதி நள்ளிரவு முதல் குறைக்கப்படும் எனவும் போக்குவரத்து அமைச் சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அமைச்சரவைப் பொறுப்புகள் வழங்கப்படுவதிலும் தாமதம்

புதிய அமைச்சரவையில் அமைச்சர்களுக்கு வழங்கப்பட் டுள்ள அமைச்சுக்களில் அடங் கும் பொறுப்புக்கள் உள்ளடங் கிய விசேட வர்த்தமானி அறிவித் தலை வெளியிடுவதில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலை நேற்று (திங்கட் கிழமை) வெளியிட எதிர்பார்த்துள் ளார் என ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனகடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும், ஜனாதிபதி மைத் திரிபாலசிறிசேன நேற்று பிற்பகல் தனிப்பட்ட பயணமொன்றை மேற்கொண்டு வெளிநாடு சென் றுள்ளார். இந்த பயணம் நான்கு நாள்கள் எடுக்கும் எனவும் தெரி விக்கப்படுகின்றது.

இதன்படி, இந்த விசேட வர்த் தமானி அறிவித்தல் இன்னும் 4 நாள்களினால் தள்ளிப்போடப் படும் சாத்தியப்பாடுகள் உள்ளன எனவும் அரசியல் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

# அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தயாராகின்றாராம் மைத்திரி!

இலங்கையில்ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைகள் தணிந்துள்ள நிலையில், ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார்.

தேசிய மட்டத்திலான தேர்தல் ஒன்றை இலக்கு வைத்து ஜனாதி பதி செயற்பாடுகள் அமைந் துள்ளன என்று கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை ஜனாதிபதிநேற்றுச்சந்தித்து பேச்சு நடத்தினார். இதன்போது கட்சியின் எதிர்கால வேலைத்திட்டம், மீள மைப்பு நடவடிக்கைகள் என்பன குறித்து ஆராயப்பட்டன.

கட்சியின் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் எதிர்வரும் ஜன வரி மாத நடுப்பகுதியில் ஆரம் பிக்கப்படவுள்ளது. இதற்கு சகல தொகுதி அமைப்பாளர்களினதும் ஒத்துழைப்பு அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வலுப்படுத்தி எதிர்வரும் தேர்தல் களுக்காக அதனை தயார்படுத்த தொகுதித் தலைமைத்துவங்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது ஐக்கிய தேசியக் கட்சிக் குள்ளேயே சிலர் கழுத்தறுப்புச் செய்தமைதான் காரணம் என்று சீறிச் சினந்திருக்கின்றார் அவர்.

கழுத்தறுப்பு விவகாரம் அவருக்கு நன்கு பரிச்சயமானது தான்.

கொழும்பு மாவட்டத் தேர்தல் தொகுதியில் கணிசமான தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். அவர் களில் பெரும்பாலானோர் ஐ.தே. கட்சிக்கு வாக்களிப்பதே வழமை. கொழும்பு இன்றும் ஐ.தே.க.பிடிக் குள் இருக்கின்றமைக்கு அது தான் காரணம்.

ஆனால் கொழும்பு மாவட்டத் தில் ஒன்று அல்லது அதிகம் போனால் இரண்டு தமிழ் எம்.பிக் களே ஐ.தே.க.பட்டியலில் தெரிவா வார். அனேகமாக ஒன்று. எப்போ தாவது இரண்டு வந்தமை உண்டு. மனோகணேசனும், மகேஸ்வரனும் வந்ததைப் போல.

அதற்கு முக்கிய காரணம் ஐ.தே.க. தலைமைப்பீடத்தின் குள்ளநரிப் போக்குத்தான். எந்த சமயத்திலும் – கூடியவரை – ஐ.தே. க. பட்டியலில் மூன்றாவது தமிழ் வேட்பாளர் வரவிடாமல் அவர்கள் பார்த்துக்கொள்வர். வெட்டிவிடுவர்.

மனோகணேசனின் கட்சிக்குத் தங்களின் கொழும்பு வேட்பாளர் பட்டியலில் இரண்டுஇடங்கள் கொடுத்துவிட்டால் ஐ.தே.க. அதற்கு மேல் ஒரு தமிழரைத் தன்னும் தனது பட்டியலில் நிறுத் தாது.

அதற்கு முக்கிய காரணம் ரவி கருணாநாயக்கா போன்ற பிரகிருதி கள்தாம். கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டி யிடும் ரவி கருணாநாயக்கா போன்றோர் தமிழர்களின் வாக்கு களைத் தாம் நம்பியிருக்கின்ற னர். வேட்பாளர் பட்டியலில் மூன்று தமிழர்களைச் சேர்த்துக் கொண்டு விட்டால், தமிழ் வாக்காளர்கள் தமது மூன்று விருப்பத் தெரிவு வாக்குகளையும் தமிழர்களுக்கே அளித்துவிடுவார்கள். தங்க ளுக்கு அவர்களின் வாக்குகள் கிடைக்கமாட்டா என்பது ரவி கருணாநாயக்கா போன்றோரின் கவலை.

பட்டியலில் இரண்டு தமிழர் களுக்கு மேற்படாமல் பார்த்துக் கொண்டால், வாக்களிக்கும் தமிழ் மக்கள் மூன்றாவது விருப்பு வாக்கைத் தமக்கு அளிப்பார்கள் என்ற உறுதியில், மூன்றாவது தமிழ் வேட்பாளர் கொழும்பு ஐ.தே. க. பட்டியலில் வராமல் பார்த்துக் கொள்வர் இத்தரப்பினர்.

2010 பொதுத் தேர்தலில் ஐ.தே.க. பட்டியலில் மனோ கனே சன் கட்சிக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன. தம்மைக் கண்டி யில் வேட்பாளராக நிறுத்திய மனோ கணேசன், தனது தம்பி யார் பிரபா கணேசனையும், குமர குருபரனையும் கொழும்பில் வேட் பாளராக்கினார்.

அப்போது ஐ.தே.கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பின ராக இருந்தராம் மிகவும் செல்வாக் குக் கொண்டிருந்தார். ஐ.தே.க. வில் ஒரு சாரார் கட்சிப் பட்டியலில் ராமை நிறுத்த விரும்பினர். ஆனால் கடைசி நேரம் வரை ஒற்றைக் காலில் நின்று அதற்கு ஆப்பு வைத்தார் ரவி கருணா நாயக்கா. கட்சிக்குள் எதிர்த்துக் கேட்டவர்களுக்கு ஒரு சமாதானம் கூறினார்.

*"தமிழர்கள் தங்களின் மூன்று வாக்குகளையும் தமிழர்களுக்கே அளித்துவிட்டால் கட்சித் தலைவர் ரணிலுக்குத் தமிழர்களின் வாக்கு கள் விழமாட்டா. அவரின் மொத்த வாக்குகள் குறைந்து விடும்."* – என்று சமாளிப்புக் கூறி ராமை கட்சிக்குள்ளேயே வெட்டினார்.

அவர் விரும்பியபடி தேர்தல் முடிவில் ஐ.தே.க. பட்டியலில் முத லிடம் ரணிலுக்கு. அடுத்த இடம் ரவி கருணாநாயக்காவுக்கு.

இப்படித் தமிழ் வேட்பாளரை ரவி முன்னுக்கு நின்று வெட்டிய தால் கட்சிச் செயற்குழுவில் இருந்த தமிழர்கள் கூட (ராம், சுவாமிநாதன், விஜயகலா மகேஸ் வரன், கௌரிசங்கரி தவராஜா போன்றோர்) அவர் மீது கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தனர்.

கட்சிக்குள் ரணில் அணி, சஜித் அணி என்று பிளவு உச்சத் துக்கு வந்து, கட்சி நிர்வாகிகள் தெரிவு உள்கட்சித் தேர்தல் மூலம் முன்னெடுக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. ரணில் நிறுத்திய எல்லா வேட்பாளர்களும் வென்றனர். ரவி கருணாநாயக்கா மாத்திரம் தோற்றார். அவர் சஜித்தின் வேட் பாளரிடம் கவிழ்ந்தமைக்கு செயற்குழுவில் இருந்த – ரணில் ஆதரவுப் போக்குடைய – தமிழ் உறுப்பினர்களே காரணம். நாடா ளுமன்றத் தேர்தலில் ராமை வெட் டியமைக்குப் பழி தீர்த்துக் கொண் டார்கள் அவர்கள்.

கட்சிக்குள் கழுத்தறுப்பு வேலை கள் குறித்துப் பொருமும் ரவி கருணாநாயக்கா, தேர்தல் சம யங்களில் வேட்பாளர் தெரிவுகளின் போது தாம் நடந்து கொண்ட விதங்களை ஒரு தடவை சிந்தித் துப் பார்ப்பது நல்லது.

பொதுவாக, இப்படி தம்மைப் பற்றி ஊடகங்களில் – பத்தி ரிகைகளில் – இத்தகைய விமர் சனம் வந்ததும் உடனே சீறி எழுந்து சம்பந்தப்பட்ட ஊடகத் துக்கு சட்டத்தரணி மூலம் Letter of demand அனுப்பி மிரட்டு வது அவர் வழமை. ஆனால் பிணைமுறி வழக்கு விடயம், அவரது குடும்பத்துக்கு வாங்கிய சொகுசு பிளட்டுக்கு அர்ஜுன அலோஸியஸ் மூலம் பணம் பட்டு வாடா செய்த விவகாரம் போன் றவை அம்பலமான பின்னர் இந் தச் சட்டத்தரணி மூலம் அனுப்பும் Letter of demand வழக்கத்தை அவர் குறைத்துக் கொண்டுள்ளார்.

சில சமயம் இந்தப் பத்திக்கும் விரைவில் அவரது சட்டத்தரணி யிடமிருந்து கடிதம் வந்தாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை.

\- மின்னல் -

## மைத்திரிபால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோருக்கு இடையில் ஓர் உடன் படிக்கை எட்டப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரச ஊடகங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதை விட அங்கு அரச பிரதிநிதி களை நியமிக்க ஜனாதிபதி ஒப் புக்கொண்டுள்ளார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

ஜனாதிபதி நியமிக்கும் பிரதி நிதிகளின் பெயர்கள் அமைச்சர் சமரவீரவுக்கு இன்று அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரச ஊடகங்களையும் சில மிக முக்கியமான திணைக் களங்களையும் தனது தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப் பதற்கு ஜனாதிபதி திட்டமிடுகிறார் எனப் பரவலாகப் பேசப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மஹிந்த, கோட்டாபயவுக்கு எதிராக வெளிநாட்டு நீதிமன்றங்களில் மனு!

## புலம்பெயர் சட்டத்தரணிகள் நடவடிக்கை

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்டோருக்கு எதிராக வெளிநாட்டு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யும் முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன என கோட்டாவின் ஊடகப் பேச்சாளர் மிலிந்த ராஜபக்ஷ தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட போன்ற முன்னாள் படைத் தளபதிகளுக்கு எதிராகவும் வெளிநாட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முயற்சிகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் சட்டத்தரணி சிவானி தியாகராஜா தலைமையிலான சட்டத்தரணிகளால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தமது டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார்.

இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் கடந்த ஆட்சியாளர்களை நிறுத்த வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

மேலும், இலங்கையில் தற்போது நீடித்துவரும் அரசியல் பிரச்சினைகளில் பிரதமர் ரணில் தலைமையிலான ஆளுந்தரப்புக்கும், எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றுக் கொண்ட மஹிந்த தரப்புக்கும் இடையில் கடும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக நல்லாட்சியில் அமைச்சுப் பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு புதிய அரசில் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில், யுத்தத்தை வழிநடத்திய முக்கிய பிரமுகர்களுக்கு எதிராக வெளிநாட்டு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இடைக்கால பட்ஜெட் வாக்கெடுப்பில் பங்கேற்காதோரிடம் விளக்கம் கோரல்

கொழும்பு, டிசெ. 25

நாடாளுமன்றில் இடம்பெற்ற இடைக்கால கணக்கறிக்கை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத உறுப்பினர்களிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்ப ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த வாக்கெடுப்பின்போது, நாடாளுமன்றுக்குச் சமுகமளிக்காத 15 உறுப்பினர்களிடம் இவ்வாறு விளக்கம் கோரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுன்ற அமர்வின்போது உறுப்பினர்கள் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டுமெனக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார் எனவும், ஒரு முக்கியமான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் ஐ.தே.க. குறிப்பிட்டுள்ளது.

# பிளாஸ்ரிக் மீள்சுழற்சி நிலையம் சாவகச்சேரியில் அமைக்க ஏற்பாடு



சாவகச்சேரிநகரசபையில்பிளாஸ்ரிக் கழிவு மீள்சுழற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபைக்கு அண்மையில்விஜயம்செய்தவேள்ட்விஷன் அதிகாரிகள் நகரசபையினால் மேற்கொள்ளப்படும் திண்மக்கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்சுழற்சிச் செயற்பாட்டை பார்வையிட்டிருந்தனர்.

இதன்போது தரம் பிரிக்கப்படும் பிளாஸ்ரிக் கழிவுப்பொருள்களை கொள்வனவு செய்வதற்கு உள்ளூர் பிளாஸ்ரிக் மீள்சுழற்சி நிறுவனங்கள் போதியளவில் இல்லை. அதனால் தரம் பிரிக்கப்பட்ட அதிகளவான பிளாஸ்ரிக் பொருள்கள் தேங்கிக்கிடக்கின்றன என நகராட்சி மன்றத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனால் வேள்ட்விஷன் அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து அப்பகுதியிலேயே பிளாஸ்ரிக் கழிவுகளைத்துகள்களாக்கி மீள்சுழற்சிக்கு ஏற்றுமதி செய்யும் நிலையம் ஒன்றை அமைத்துஅதனைப்பொதுஅமைப்பு ஒன்றினால் இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வேள்ட்விஷன் அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக் மீள்சுழற்சி நிலையம் இயங்க ஆரம்பித்தால் தென்மராட்சியில் பிளாஸ்ரிக் கழிவுகள் குறைவடையும் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# சிறந்த பொலிஸ் பணியாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் ஊக்குவிப்பு நிதி



யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணத்தில் சிறந்த பொலிஸ் சேவை யாற்றியவர்களுக்கான ஊக்குவிப்புத்தொகை நேற்று வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களைக் கௌரவிக்கும் வகையில் இந்த ஊக்குவிப்புத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது சிறந்த சேவையாற்றிய 20 பொலிஸாருக்கு 1 லட்சத்து 33 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டதாக யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னான்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நான்காவது முறையாக பொலிஸாரின் சிறந்த சேவையைக் கௌரவித்து ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் மாத்திரம் சுமார் 8 லட்சம் ரூபாவுக்கு அதிகமான நிதி, சிறப்பான சேவையை வழங்கிய பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு வழங்ககப்பட்டுள்ளதாக யாழ் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (ஐ)

# வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு இளைஞர்கள் உதவி

தமிழர் தாயகத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடரால் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குத் தேவையான அவசர உதவிகளை அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள், மத அமைப்புக்கள் உள்ளிட்டவர்கள் வழங்கி வருகின்றனர்.

இந்த உதவித் திட்டங்களைப் பெரும்பாலும் இளைஞர்களே முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள், சைவ மகா சபை இளைஞர்கள், உடும்பிராய் அன்னிங்கை கிராம இளைஞர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் இளைஞர்கள் உள்ளிட்டோர் இந்த நிவாரணப் பணிகளை முன்னின்று நடத்தி வருகின்றனர்.

உரும்பிராய் மேற்கு அன்னுங்கை கிராம இளைஞர்களின் குறுகியகால முயற்சியால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி பாரதிபுர மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 115 குடும்பங்களுக்கு ஒரு தொகுதி உலர் உணவுகள், குடிதண்ணீர்ப் போத்தல்கள், பாய்கள், போர்வைகள் மற்றும் நுளம்புச் சுருள்கள் என்பன வழங்கப்பட்டன.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளிநொச்சி தர்மபுரம் மேற்கு, நாகேந்திரபுரம், இராமநாதபுரம், இத்தாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்களுக்கு நேரடியாகச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அவர்களுக்கு அவசிமான உலருணவுப் பொருள்களை வழங்கினர்.

கிளிநொச்சி திருமுறிகண்டி இந்துபுரத்தைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கான நுளம்பு வலைகளும், திருமுறிகண்டி மகாவித்தியாலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள 93 குடும்பங்களுக்கான நுளம்பு வலைகளும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கான உலருணவுப் பொருள்கள் மற்றும் நுளம்பு வலைகளும், கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலையில் தங்கியுள்ள 105 குடும்பங்களுக்கான நுளம்பு வலைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. பளையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உதவிக் கரம் நீட்டியுள்ளது.

இதேவேளை வெள்ளப் பாதிப்பினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட புளியம்பொக்கனை நாகேந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த 162 குடும்பங்களுக்கான பல்வேறு உதவிகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நேரடியாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்தக் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உதவிகளை வழங்கும் பொருட்டு போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள் செலவு முழுவதையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுள்ளது.

இந்தக் கிராமத்திற்குள் வேறெந்த வாகனங்களும் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது – என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கிறிஸ்தோதய பிரதிக்ஞை

இன்று கிறிஸ்தோதயத் திருநாள்.

இயேசுபாலன் பிறந்த நன்னாள்.

விண்ணகம் மண்ணகத்தைத் தேடி, நாடி வந்த நாள். கடவுள் தம் ஒரே மகனை சமாதானப் பிரபுவாக நமக்கு அனுப்பி வைத்த நாள்.

உலகுக்கு சமாதானத்தை பறை அறிவிப்பதுதான் உலக இரட்சகரின் பிறப்பின் நோக்கம்; இலக்கு; தத்துவம் அனைத்தும்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு – மனுக்குலம் மேன்மையுறுவதற்கு – திருக்குமாரன் நமக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டினார்.

இரக்கம், அன்பு, சகிப்புத்தன்மை, அமைதி, புரிந்துணர்வு, நல்லிணக்கம், சமாதானம், நீதி, எளிமை, சாந்தம், மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், மாற்றானை மதித்தல் என்பன இயேசு நமக்குப் போதித்துச் சென்ற அறவழிகள். அதன் வழி ஒழுகும் – நற்குணம் நிரம்பிய – சமூகம் சீர்வளம் பெறும். அச்சமுதாயமே பூலோக சொர்க்கம்.

நமது இறைகுமாரன் வெறும் போதனையாளராக – உபதேசியாக – பிரசாரகராக – வாழ்ந்து சென்றுவிடவில்லை. மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய உயரிய விழுமியங்களை அவர் முன்மாதிரியாகக் கடைப்பிடித்து, வாழ்ந்து காட்டி, நம்மை வழிப்படுத்தி நின்றார்.

பாவ வாழ்க்கையிலிருந்து மனுக்குலத்தை மீட்கவே இயேசு பாலனை – சமாதானப் பிரபுவை – தமது மகனை – தனது தூதுவராக மனித உருவில் அனுப்பி வைத்தான் இறைவன் என்பதே திருவிவிலியம் கூறும் உண்மை.

அளவிடமுடியாத கருணைக்கும், உச்ச சகிப்புத் தன்மைக்கும், பேரிரக்கத்துக்கும், தாராள மன்னிப்புக்கும், உயரிய விட்டுக் கொடுப்புக்கும், மேன்மையான சாந்தத்துக்கும், பெருமைமிகு எளிமைக்கும் உதாரண புருஷராக வாழ்ந்து காட்டினார் அவர்.

தம்மைச் சித்திரவதைக்கு உள்ளாக்கியோரை அவர் சினந்து கொண்டாரல்லர். மாறாக, அவர்களை மன்னிக்கக் கோரி மன்றாடும் மாண்புமிகு சீலராகவே அவர் விளங்கினார். அவரின் அந்த உயரிய தியாகப் பண்பு மனுக் குலத்துக்கு ஒரு மாபெரும் வழிகாட்டல்.

இயேசுவின் வழி போன்றே அன்பு மார்க்கத்தை – அறநெறியை– சமாதான சகவாழ்வை – வலியுறுத்தும் நான்கு உயரிய மதங்கள் நிலைபெற்ற ஒரு தீவில் நாம் வசிக்கிறோம் என்பது பெருமைக்குரியது.

உலகில் உயரிய அறப்பண்புகளைப் போதிப்பதால் விஞ்சி நிற்கும் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், இந்து சமயம் ஆகிய நான்குமே வேரூன்றி, கிளை பரப்பி, நிற்பதால் சிறப்புள்ள இலங்கைத் தீவு, அவை போதிக்கும் உயரிய அறவழியில் தன்னை நெறிபபடுத்த முடியாது திண்டாடுவது விசனத்துக்குரியது.

இந்த நான்கு பெரும் மார்க்கங்களுமே அன்பையும், சகிப்புத் தன்மையையும், விட்டுக் கொடுப்பையும், அடுத்தவனையும் மதித்துப் போற்றும் மனித்துவ மாண்பையுமே வலியுறுத்து நிற்கின்ற போதிலும், அந்த மார்க்கங்களில் அமைதியை அடைய முடியாது நமது தீவு அவலப்பட்டு நிற்பது வருத்தத்துக்குரியது.

நம் தீவில் இணக்கமின்மைக்கும், பிணக்குக்கும், முரண்பாடுகளுக்கும், காழ்ப்புணர்வுக்கும், எதிரித்தன்மைக்கும் பிரதான காரணம் மொழி என்றால், அடுத்த ஏது மத முரணிலைதான்.

இந்த வேறுபாடுகளைக் கடந்து புரிந்துணர்வு, நல்லிணக்கம், உடன்பாடு, நீதியான தீர்வு, சமாதானம், அமைதி, சௌஜன்யம், அபிவிருத்தி, இவற்றின் மூலம் கௌரவ சகவாழ்வு ஆகிய பேறுகளை நமது நாடு பெற வேண்டுமானால் இந்த நான்கு மதங்களும் போதித்த அறவழிப்படி நாம் ஒழுகுவதுதான் ஒரே மார்க்கமாகும்.

அதையே மனுக்குலத்துக்கான சமாதானச் செய்தியாக நமக்கு எடுத்து வந்தான் இயேயசு பாலன்.

இயசு பிரான் காட்டிய அந்த மாண்புமிகு பாதையில் சென்று, நமது தேசத்தைப் பீடித்து நிற்கும் இனப் பிணக்குக்கிற்குத் தீர்வு காண முயலுவோமாயின் நிலைத்த, நீடித்த, நிரந்தரமான அமைதியும், தீர்வும், சமாதானமும் நமது காலடியில் வந்து சேரும் என நம்பலாம்.

இயேசு வழியில் கிறிஸ்தவமும் மற்றும் ஏனைய மதங்களும் காட்டிய சத்திய மார்க்கத்தில் – உயரிய அறநெறியில் – மற்றைய இனங்களையும், மொழிகளையும், மதங்களையும் மதித்து வாழ நமது தேசம் முன்வருமானால் இந்த நாட்டில் சகோதரத்துவம் மிளிரும்; இனக்குரோதமும், மத மாச்சரியமும், மொழி முரண்பாடும் தானே மறையும். அரவணைக்கும் மாண்பு ஓங்கும். சீர்பெறும் சமூகம் நிலை பெறும்.

அந்த சத்திய – சாந்த – பாதையில் பயணிப்பதற்கு இன்றைய கிறிஸ்தோதய நாளில் பிரதிக்ஞை செய்து கொள்வோமாக!

# ஜனாதிபதியின் நத்தார் செய்தி



சமாதானம், சகவாழ்வு ஆகிய நற்குணங்களின் மகிமையை போற்றும் இயேசு பிரானின் செய்தியினை மீள் ஒலிக்கச் செய்யும் மகிழ்ச்சிகரமான பொழுதிலேயே நத்தார் உதயமாகின்றது. அந்தவகையில் மனித இனத்தினை இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி கொண்டு செல்வதற்காக இவ்வுலகில் அவதரித்த இயேசு பிரானின் பிறப்பினைக் கொண்டாடும் உலகவாழ் கிறிஸ்தவ மக்கள் புத்தம்புது எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புகளுடனேயே நத்தார் பண்டிகையை கொண்டாடுகின்றனர்.

கிழக்கு வானில் தோன்றி ஞானிகளுக்கு வழிகாட்டிய நட்சத்திரம் அவர்களுக்கு முன் சென்று பாலகன் இயேசு பிறந்த மாட்டுத் தொழுவத்திற்கு மேல் உதித்த அந்த இரவானது, அளவற்ற அன்பின் செய்தியையே சுமந்து வருகின்றது.

இயேசு நாதர் தம் வாழ்நாள் முழுவதிலும் பாசமும் நேசமுமிக்க வார்த்தைகளையே உபயோகித்தார். மீனவர்கள், தச்சர்கள், கமக்காரர்கள் போன்ற சாதாரண பாமர மக்களுடனேயே அவர் உரையாடி வந்தார். 'கண்ணுக்கு கண் பழி வாங்குதல் என்றும் கல்லால் தாக்கப்படின் மலையைக் கொண்டு திருப்பித் தாக்கி நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றுமே இதுவரை உங்களுக்கு போதிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆயினும் எதிரியின் மீதும் அன்பைச் செலுத்துங்கள். உம்மை வெறுப்போர் மீதும் இம்சிப்போர் மீதும் நீ பாசத்தை செலுத்து' என்பதே அவரது போதனைகளாகும்.


நத்தார் என்பது இத்தகைய உயரிய நோக்கத்தைக் கொண்ட உன்னதமானவரின் அளவற்ற நற்குணங்களை மீண்டும் மீண்டும் நினைவுகூரும் காலமாகவே அமைகின்றது. ஆகையால் இயேசு கிறிஸ்துவின் அக்கொள்கையினை நிலைநாட்ட திடசங்கற்பம் கொள்ள வேண்டியது எம்மவரின் கடமையாகும். அழிவை நோக்கி அகன்ற வாயில் வழியே செல்லத் துடிப்பவர்களுக்கு நத்தார் பண்டிகையானது, புதியதோர் வாழ்க்கையை நோக்கி பயணிப்பதற்கான வழியாகவே அமைகின்றது. சக மனிதர்களை ஏமாற்றி தீய எண்ணங்களோடு வாழும் மனிதர்கள் அவற்றை விடுத்து நற்குணமுடையவர்களாக மாறாதுவிடின், அவர்களால் ஒருபோதும் சுவர்க்க வாயிலை அடைய முடியாது என்றே இயேசு நாதர் போதித்துள்ளார்.

அமைதி, கருணை, மனித நேயம் போன்ற இவ்வுலக வாழ்க்கையின் உயர்விற்கான பண்புகளைப் போதிக்கும் இயேசு பிரானின் போதனைகளும் மனிதாபிமானம், சகவாழ்வு, தியாகம் பற்றிய அவரது நற்செய்திகளும் இந்த நத்தார் காலத்தில் நாடெங்கிலும் எதிரொலிக்கட்டும்!

இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகெங்கிலும் பரந்துவாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் எனது மகிழ்ச்சிகரமான இனிய நத்தார் வாழ்த்துக்கள்.

**மைத்திரிபால சிறிசேன,**
**இலங்கை ஜனாதிபதி**

# நிரந்தர சமாதானத்துக்காக ஒற்றுமையுடன் உழைப்போம்



மக்கள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்திய இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் இந்தநாளில், இந்தநாட்டு மக்கள் உண்மையான நம்பிக்கையையும் மகிழ்ச்சியினையும் அடையவேண்டும் என நான் பிரார்த்திக்கிறேன். இந்த பண்டிகை நாளை கொண்டாடும் நாம் இயேசு நாதர் இந்த உலக வாழ்வில் வாழ்ந்தும் போதித்தும் வந்த அன்பு, நீதி, மற்றும் பிறரை நேசித்தல் போன்ற படிப்பினைகளை மறவாதிருப்போமாக.

மேலும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகளில் வாழ்வோர், ஒடுக்கப்பட்டோர், இயலாமையிலுள்ளோர் போன்றவருடன் எம்மை அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலம் நத்தார் பண்டிகையின் உண்மையான தாற்பரியங்களை கடைப்பிடிப்போமாக.

நீதி மற்றும் சமத்துவம் அடிப்படையில் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப முன்வருமாறு இந்நாட்டின் தலைவர்களை நான் அழைத்துநிற்கிறேன்.

இனிய கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்

**இரா. சம்பந்தன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்**
**தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

# சேவை மனப்பான்மையுடன் யாவரும் செயற்படுவோம்!



இறை தூதரின் பிறப்பைக் கொண்டாடும் இன்றைய நத்தார் தினத்தில் அனைவருக்கும் எமது நத்தார் தின வாழ்த்துக்கள் உரித்தாகுக!

கிறீஸ்தவ மதத்தின் தனிப்பெருஞ் சிறப்பு அதன் சேவை மனப்பான்மையாகும். தன்னை மறந்து பிறரை நேசித்தவர் இயேசு கிறீஸ்து நாதர். சிலுவையில் அவர் அறைபட்டிருந்த போது 'இறைவனே! அவர்களை மன்னிப்பாயாக! தாம் செய்தது தவறு என்பதை அறியாதவர்கள் அவர்கள்' என்று இறைவனிடம் மன்றாடினார். தன்னை மறந்து தன் இடர்களின் மத்தியிலும் மற்றவர்களை நேசித்தவர் இயேசு கிறீஸ்து நாதர்.

இன்று இந்த நாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவ வேண்டுமென்றால் கிறீஸ்தவ அடையாளங்களான அன்பும், சேவை மனப்பான்மையும் யாவரையும் ஆட்கொண்டிருத்தல் வேண்டும். அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை இறைவன் இந் நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்குவானாக!

யாவர்க்கும் எமது இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்!

**நீதியரசர்**
**க.வி.விக்னேஸ்வரன்**
**முன்னாள் முதலமைச்சர்**
**வடமாகாணம்**

## நாளை

26.12.2018
புதன்கிழமை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ 6.36 வரை
திதி : சதுர்த்தி பி.ப 3.44 வரை
சுபநேரம் : 4.57 – 6.27 வரை
இராகுகாலம் : 12.27 – 1.57 வரை


# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவுவதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம்

## வடக்கு முன்னாள் முதல்வர் விக்கி அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடக்கு மாகாணத்தில் பெய்துள்ள தொடர் அடை மழை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து தற்காலிக தங்குமிடங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்குப் புலம்பெயர் தமிழ் மக்களும்,கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம்,மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் தம்மால் முடிந்தளவு உதவிகளை வழங்குமாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமானக.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் மாற்று உடை இன்றி பெரிதும் அவதிப்படுகின்றனர்எனவும் அதனால்அவர்களுக்கானமாற்றுஉடைகளைவழங்குவதற்கான உதவிகளையும் அடுத்த சில நாள்களுக்



கான அத்தியாவசிய உலர்உணவுபொருள்களையும் வழங்கி உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குழந்தைகளுக்கான நுளம்பு வலைகள் மற்றும் பால் மாஆகியவற்றுக்கான தேவையும் பெருமளவில் ஏற்பட்டுள்ளதாகவும் அவற்றையும் வழங்கி உதவுமாறும் விக்கி கோரியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவு மற்றும் உடை ஆகியவற்றை வழங்கும் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் கூட்டணி மேற்கொண்டுள்ளதாகவும்,அதேபோலவேறுபலஅமைப்புக்களும்தொண்டு நிறுவனங்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருப்பதால் தமக்குவசதியான வழிகளில் தமது உதவிகளைமேற்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முக்கியமாகமக்களின் கொடைகள் தேவையுடையோர் கைகளில் கிடைக்க வேண்டுமென்பதை ஊர்ஜிதப்படுத்துவது எல்லோரதும் கடமையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாரேனும் தமதுஉதவிகளைதமிழ் மக்கள் கூட்டணி ஊடாக வழங்குவதாக இருந்தால் அவர்களை உடனே தம் கூட்டணியைச் சேர்ந்த அருந்தவபாலன் -0776186554என்ற இலக்கத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுள்ளார்.

பொருள்கள் கொழும்பில் பொட்டலங்கள் ஆக்கப்பட்டு கிளிநொச்சிக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

முன்னாள் முதல்வர் நாளை காலை கிளிநொச்சியில் வைத்து உதவிப் பொருள்களை தேவைஉடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட பெறுநர்களிடம் அருந்தவபாலனுடனும் மற்றைய கூட்டணி அங்கத்தவர்களுடனும் கொடையினர்களுடனும் சேர்ந்து கையளிக்க உள்ளார். (ஐ)

# வவுனியாவில் மழையால் 132 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியா, டிசெ. 25

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக 132 குடும்பங்களைச்சேர்ந்த 455 பேர் பாதிப்படைந்துள்ளனர் என மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அடை மழை காரணமாக வவுனியா வடக்குப் பகுதியே பாதிப்படைந்துள்ளது. வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், கனகராயன்குளம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், நைனாமடு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரும், மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேரும், மாறா இலுப்பை கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், கற்குளம் கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும், கனகராயன் குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேருமாக 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந் துள்ளது.

அத்துடன், மழை தொடரும் பட்சத்தில் பாதிப்புக்கள், விவசாய அழிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது - என்றார். (ஐ - 100)

# பாதுகாப்பு அதிகாரிகளை தாக்கிய 11 சீனர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 25

கொழும்பில் கட்டுமான வேலைத் தளத்தில் இடம்பெற்ற கைகலப்புச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய 11 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - 1 இல் உள்ள சத்தாம் தெருவில் கட்டுமானத் தளமொன்றில் பாதுகாப்புப் பிரிவினருடன் ஏற்பட்ட மோதலிலேயே சனிக்கிழமை இந்தச் சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோதல் காரணமாக இரண்டு சீன தொழிலாளர்கள் மற்றும் மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்தையடுத்து பாதுகாப்பு அதிகாரியால் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதன் பின்னரே சீன தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சீனத்தொழிலாளர்கள் இருவர் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காயமடைந்த பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சீனத்தொழிலாளர்களை டிசெம்பர் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தினால் உத்தரவிடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வலி. கிழக்கு பிரதேச சபையினால் இடருதவிப் பொருள்கள் சேகரிப்பு

வெள்ளப் பாதிப்பிற்கு உள்ளான மக்களுக்காக நிவாரண பொருள் சேகரிப்பைத் தாம் ஆரம்பித்துள்ளனர் என வலிகாமம் கிழக்கு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வன்னி மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பினால் பெருந்தொகையான குடும்பங்கள் நிர்க்கதி நிலையை அடைந்துள்ளன. அம் மக்களுக்கு வலி கிழக்கு பிரதேசத்தில் இருந்து இயன்ற உதவியை நல்கும் வகையில் நிவாரண உதவிகளை சேகரிக்கும் பணியில் எமது பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் ஈடுபட்டுள்ளோம்.

அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு எவ்வாறாக பிரதேச சபை தொழிற்பட வேண்டும் என்ற கலந்துரையாடல். பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைமை தாங்கும் உறுப்பினர்களை அழைத்து ஞாயிற்றுக் கிழமையன்று அவசரமாக நடத்தியிருந்தோம். அதில் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் வலி கிழக்கு பகுதிகள் தோறும் மதியம் முதல் ஒலிபெருக்கி வாயிலாக மக்களுக்கான நிவாரணப்பொருள்களை சபையில் திங்கட்கிழமை காலை கையளிக்க முடியும் என்பது தொடர்பில் உத்தியோகத்தர்களைக் கொண்டு அறிவித்துள்ளோம்.

மேலும் நேற்று திங்கட்கிழமை காலை எம்மால் வலிகாமம் கிழக்கின் பிரதான வீதிகள் தோறும் பிரதேச சபையின் வாகனத்தில் உணவுப்பொருள்கள் சேகரிக்கப்பட்டன. இதேவேளை பிரதேச சபை உறுப்பினர்களும் தம்மால் இயன்ற உலருணவு உதவிப்பொருள்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர். இவ் உதவிகள் அனைத்தும் உரியவாறு சேகரிக்கப்பட்டு வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் இடைத்தங்கல் முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விரைவில் கையளிக்கப்படவுள்ளன.

உதவிப்பொருள்களை வழங்க விரும்புபவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் நேரிலோ அல்லது ஒலி பெருக்கி அறிவிப்புடன் வலி கிழக்கில் நிவாரணப் பொருள் சேகரிப்பில் ஈடுபடும் வாகனத்திலோ கையளிக்க முடியும் எனவும் பலரும் முன்வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி நல்க வேண்டும் எனவும் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### நில அளவையாளர் சேவை வழங்குநர்களாக பதிவு செய்தல் - 2019

சபையினால் 2019ஆம் ஆண்டிற்கு நில அளவை சேவைகளை பெறுவதன் பொருட்டு நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்:**

* வலி. கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

* குறைந்தது 02 வருடங்கள் குறித்த துறையில் பணியாற்றியிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00 (வரிநீங்கலாகி) செலுத்தப்படல் வேண்டும்.

தாங்கள் இச்சேவையினை வழங்க விரும்பினால் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை தலைமை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி 31.12.2018 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்பாகவோ கடித உறையின் இடது பக்க மூலையில் **'நிலஅளவையாளர் சேவைகளை வழங்குவதற்கான விண்ணப்பம் - 2019'** என குறிப்பிட்டு தபால் மூலம் **'தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்'** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 226 8867 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலி. கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

# சபரிமலை செல்லும் சென்னைப் பெண்களின் முயற்சி பக்தர்களின் கடும் எதிர்ப்பால் தோல்வி






பெண்களை செல்லவிடாமல் போராட்டம் நடத்திய போராட்டக்காரர்கள்.




சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்திய மனிதி பெண்கள் அமைப்பினர்.



சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் செல்ல முயன்ற 50 வயதுக் குட்பட்ட சென்னையைச் சேர்ந்த பெண்கள் 11 பேர், போராட்டக்காரர்களின் கடும் எதிர்ப்பால் பின்வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பெண் பக்தர்கள் செல்ல கடும் எதிர்ப்புத் தெரிவித்த போராட்டக்காரர்களை கேரள பொலிஸார் கைது செய்தனர். பம்பையில் 6 மணிநேரம் பெரும் பரபரப்பாக இருந்த சூழல் முடிவுக்கு வந்தது.

சென்னையைச் சேர்ந்த மனிதி எனும் பெண்கள் நல அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செல்வி தலைமையில் 50 வயதுக்குட்பட்ட பெண்கள் 11 பேர் சபரிமலைக்கு நேற்று முன்தினம் சென்றனர். சென்னையில் இருந்து தமிழக எல்லையான கம்பம்மேடு, இடுக்கி வழியாகப் பம்பைக்கு காலை 5.30 மணிக்கு சென்றனர்.

இந்த விஷயம் அறிந்ததும் பம்பையில் தமிழக பெண் பக்தர்களை கேரள பொலிஸார் தடுத்து நிறுத்தினர். ஆனால், உச்ச நீதிமன்ற தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, சாமி தரிசனம் செய்யாமல் திரும்பமாட்டோம் என்று மனிதி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செல்வி, தெரிவித்ததால் பதற்றம் அதிகமானது.

சென்னையில் இருந்து வந்த மனிதி அமைப்பைச் சேர்ந்த பெண்களுடன், கேரள மாநிலத்தைச் சேர்ந்த தலித் பிரிவைச் சேர்ந்த அம்மினி உள்ளிட்ட பெண்களும் சேர்ந்து சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தினார்கள். தாங்கள் சபரிமலை ஐயப்பனைத் தரிசிக்காமல் செல்லமாட்டோம் என்று கூறி சாலையில் அமர்ந்தனர்.

பெண்கள் வந்திருப்பதை அறிந்து போராட்டக்காரர்கள் கோயிலுக்குச் செல்லும் மலைப்பாதையில் அமர்ந்து ஐயப்ப நாம ஜெபத்தைகூறத் தொடங்கியதால், பதற்றம் அதிகரித்தது.

இதையடுத்து, நீலி மலைப் பாதையை மறித்து அமர்ந்திருந்த போராட்டக்காரர்களை அப்புறப்படுத்த பொலிஸார் முயற்சித்தனர். இதனால், பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே லேசான தள்ளு முள்ளு ஏற்பட்டது. மேலும் நேரம் செல்லச் செல்ல பக்தர்கள் கூட்டம் போராட்டக்காரர்களுடன் சேர்ந்து நாபஜெபத்தை உச்சரிக்கத் தொடங்கியதால் பதற்றம் அதிகமானது.


மண்டலபூஜை தொடங்க இன்னும் சில நாள்களே இருக்கும் நிலையில், லட்சக்கணக்கில் பக்தர்கள் வரத் தொடங்கியுள்ள நேரத்தில் இத்தகைய போராட்டம் பொலிஸாருக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

அதன்பின் மீண்டும் பெண்களுடன் பொலிஸார் பேச்சு நடத்தி, நிலவும் சூழலை எடுத்துக்கூறினார்கள். ஆனால், பெண்கள் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி பெண்கள் அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரினார்கள். போதுமான பாதுகாப்பை அளிக்க முடியவில்லை என்று பொலிஸார் எழுதிக்கொடுத்தால் கலைந்து செல்கிறோம் என மனிதி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் செல்வி தெரிவித்தார்.

போராட்டக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதையும், பக்தர்கள் கூட்டம் அதிகமாக வருவதையும் பார்த்த பொலிஸார் சென்னைப் பெண்களை வலுக்கட்டாயமாக அங்கிருந்து அனுப்பிவைத்தனர். பம்பையில் இருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நிலக்கல்லுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து பாதுகாப்புடன் தமிழக எல்லைவரை பெண்களைக் கொண்டு செல்ல பொலிஸார் முடிவு செய்து அழைத்துச் சென்றனர்.

# சுயநினைவுடன் நோயாளி கிற்றார் இசைக்க வெற்றிகரமாக மூளையில் அறுவை சிகிச்சை

## பெங்களூரு மருத்துவர்கள் சாதனை



நோயாளியை சுயநினைவுடன் கிற்றார் இசைக் கருவியை மீட்டக் கோரி, அவருக்கு மூளை அறுவை சிகிச்சை செய்து பெங்களூரு மருத்துவர்கள் சாதனை செய்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்தவர் அபிகே் பிரசாத். படித்து முடித்து மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றிய அபிஷேக்குக்கு இசை மீதான காதலால் வேலையை உதறி முழுநேர கிற்றார் இசைக் கலைஞரானார்.

லட்சக்கணக்கில் ஊதியம் பெற்றிருந்த தனது வேலையை உதவி கிற்றார் இசைக் கலைஞராக கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் அபிஷேக் மாறினார். இந்நிலையில், இசைக் கலைஞர்களில் சிலருக்கு வரும் நரம்பு, தசைப்பின்னல் பிரச்சினை, அதாவது 'செயல்இழப்பு' பிரச்சினை அபிஷேக்கின் இடது கை விரல்களில் ஏற்பட்டது. இதனால், கிற்றார் இசைக்கருவியை முறையாக வாசிக்க முடியாமல் கடந்த காலங்களில் சிரமப்பட்டார்.

இதையடுத்து, அபிஷேக்கை பரிசோதனை செய்த மருத்துவர்கள், மூளையில் அறுவை சிகிச்சை செய்தால், இடது கை விரல்கள் செயல்பாட்டுக்கு வரும், 3 விரல்கள் செயல்பாட்டுக்கு வந்துவிடும், கை விரல்களுக்கும் மூளைக்கும் இடையிலான தொடர்பை சரிசெய்துவிடமுடியும் என்று நம்பினர்.

இதையடுத்து பெங்களூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் வியாழக்கிழமை அபிஷேக்குக்கு மூளை அறுவை சிகிச்சை நடந்தது. 7 மணிநேரம் நடந்த இந்த அறுவை சிகிச்சையின் போது, அபிஷேக் முழு சுயநினைவுடன் இருந்தார்.

அபிஷேக் கிற்றார் மீட்டச் சொல்லி அவரின் கை விரல்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும், மூளையில் எந்த இடத்தில் இந்த பிரச்சினை உருவானது என்று கண்டுபிடித்து அதை அறுவை சிகிச்சை மூலம் மருத்துவர்கள் சரி செய்துள்ளனர்.

தற்போது அனைவரையும் போல் அபிஷேக் தனது இடது கை விரல்கள் அனைத்தையும் இயக்கும் தன்மையை பெற்றுள்ளார். இந்த அறுவை சிகிச்சையை நரம்பியல் அறுவைசிகிச்சை மருத்துவர் சரத் சீனிவாசன் தலைமையிலான குழுவினர் செய்து சாதித்துள்ளனர்.

இதுகுறித்து அபிஷேக் பிரசாத் கூறுகையில், ஒப்ரேன் தியேட்டருக்கு வரும் போது கிற்றாரை எடுத்துவர வேண்டியது அவசியம் என்று டாக்டர்கள் என்னிடம் தெரிவித்தனர். அதன்படி கிற்றாரை எடுத்துச் சென்றேன். அறுவை சிகிச்சை செய்யும் போது நீ எப்படி உணர்கிறாய், இடது கை விரல்களை அசைக்க முடிகிறதா என்பன குறித்த என்னுடைய கருத்தை அறிய வேண்டும் என்பதற்காக கிற்றாரை எடுத்துவந்து மீட்டச் சொன்னார்கள். அறுவை சிகிச்சை மூலம் என்னிடம் கேட்டு, சரி செய்தனர். இந்த அறுவை சிகிச்சை செய்தபோது, நான் முழு சுயநினைவுடன் இருந்தேன், மருத்துவர்கள் பேசியவை, நான் உரையாடியவை அனைத்தும் நினைவில் இருக்கிறது எனத் தெரிவித்தார்.

# கமலின் மக்கள் நீதி மய்யம் காங்கிரஸூடன் கூட்டணி!

நடிகர் கமலஹசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி காங்கிரஸ் கூட்டணியில் இணைவது தொடர்பான பேச்சுக்களைத் தொடங்கியுள்ளது. ஜனவரி முதல் வாரத்தில் கூட்டணி இறுதி செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிராக தேசிய அளவில் வலுவான அணியை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான அணியில் காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இணைந்து செயல்பட்டுவருகின்றன.

மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியை தொடங்கி கமலஹசன், கூட்டணி அமைத்து போட்டியிடுவாரா அல்லது தனித்து போட்டியிடுவாரா என்று பரபரப்பாக பேசப்பட்டு வந்தது. இதற்கு பதிலளிக்கும் வகையில் சனியன்று கட்சியின் செயற்குழு கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த கமலஹசன் ஒருமித்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதே நேரத்தில், பா.ஜ.கவுடன் கூட்டணி அமைப்பீர்களா என்ற கேள்விக்கு தமிழகத்தின் மரபணுவை மாற்ற நினைக்கும் கட்சிகளுடன் கூட்டணி வைக்க மாட்டோம் என்று தெரிவித்தார். எனவே, காங்கிரஸூடன் கமலஹசன் கூட்டணி அமைப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளன எனத் தெரிகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில், மக்கள் நீதி மய்யம் கட்சியை தொடங்கியவுடன் கமலஹசன் டெல்லிக்குச் சென்று காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி, சோனியா காந்தி ஆகியோரை சந்தித் துப் பேசினார். ஆரம்பம் முதலே காங்கிரஸ் தலைவர்களுடன் நெருக்கத்தைக் காட்டி வருகிறார்.

இந்தநிலையில், காங்கிரஸூ டன் இணைந்து தேர்தலை சந்திக்க மக்கள் நீதி மய்யம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பாக, காங்கிரஸ் கட்சியுடன் மக்கள் நீதி மய்யம் பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளது. இந்த பேச்சில் உடன்பாடு ஏற்படும் பட்சத்தில் கூட்டணி உறுதி செய்யப்படும் என்று தெரிகிறது.

கமலஹசன் ஓய்வு எடுப்பதற்காக சனி நள்ளிரவு சிங்கப்பூர் புறப்பட்டு சென்றார். சிங்கப்பூர் பயணத்தை முடித்து கொண்டு ஜனவரி முதல் வாரத்தில் சென்னை திரும்புகிறார். அதன்பிறகு கூட்டணி உறுதி செய்யப்பட்டு, முழு வடிவம் பெறும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அமெ. அரச துறைகள் முடக்கம் நீடிக்கப் போகின்றது நெருக்கடி

## தமது கிறிஸ்மஸ் விடுமுறையை ரத்துச் செய்தார் அதிபர் டிரம்ப்

வொஷிங்டன்,டிசெ.25

அமெரிக்காவில் செலவினப் பிரேரணை நிறைவேறுவதில் சிக்கல் நீடிக்கிறது. இதனால் முக்கிய அரசுத் துறைகள் முடங்கின. கிறிஸ்துமஸ் விடுமுறை பயணத்தை ஜனாதிபதி டிரம்ப் ரத்து செய்தார்.

மெக்ஸிக்கோவில் இருந்து யாரும் அமெரிக்காவில் சட்ட விரோதமாக நுழையக்கூடாது, அதற்கு அமெரிக்க - மெக்ஸிக்கோ எல்லையில் பிரமாண்ட சுவர் எழுப்புவேன் என்று அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, டிரம்ப் வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதியை அவர் நிறைவேற்ற மெக்ஸிக்கோவிடம் நிதி கேட்டார். அந்த நாடு தர மறுத்து விட்டதால் உள்நாட்டு நிதியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற நெருக்கடியில் டிரம்ப் உள்ளார். அவர் உள்நாட்டு நிதி ஐந்நூறு கோடி டொலர் (சுமார் ரூ.35 ஆயிரம் கோடி) வழங்க வேண்டும் என்று, அமெரிக்க நாடாளுமன்றத்தை வலியுறுத்தி வருகிறார்.

ஆனால் மெக்ஸிக்கோ எல்லைச் சுவருக்காக நாட்டு மக்களின் வரிப்



பணத்தை பயன்படுத்தக்கூடாது, அந்த திட்டத்தையே ரத்து செய்ய வேண்டும் என்பது எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியின் நிலைப்பாடு. இதனால் செலவினப் பிரேரணையை நிறைவேற்ற ஆதரவு தர முடியாது என அக்கட்சி கூறி விட்டது.

நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் உள்ள பெரும்பான்மையை பயன்படுத்தி குடியரசு கட்சி பிரேரணையை நிறைவேற்றி விட்டது.

மத்திய அரசின் 15 துறைகளில் வெளியுறவு, உள்நாட்டுபாதுகாப்பு, போக்குவரத்து, விவசாயம், நீதித்துறை உள்ளிட்ட 9 துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவில் முடிந்த நிலையில், அந்த துறைகள் தொடர்ந்து இயங்குவதற்கு செலவினப் பிரேரணை இரு சபைகளிலும் நிறைவேறியாக வேண்டும்.

பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிய பிரேரணை 100 உறுப்பினர்களை கொண்ட செனட் சபையில் 60 உறுப்பினர்கள் ஆதரவுடன் நிறைவேறியாக வேண்டும். ஆனால் அந்த பலம் குடியரசு கட்சிக்கு இல்லை. 51 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் ஆதரவை பெற வேண்டிய நிலை உள்ளது. மெக்ஸிக்கோ எல்லைச்சுவர் திட்டம் கூடாது என்பதில் ஜனநாயக கட்சி உறுதியாக உள்ளதால், செலவினப் பிரேரணை நிறைவேற வில்லை.

இதன் காரணமாக 9 துறைகள் செயலிழந்துள்ளன.

இதுதொடர்பான சமரச பேச்சில் டிரம்ப் அரசுக்கு இன்னும் வெற்றி கிடைக்கவில்லை. இதற்கிடையே செனட் சபையும் வியாழக்கிழமை வரை ஒத்தி போடப்பட்டுள்ளது.

எனவே கிறிஸ்துமஸ் பண்டிகை காலத்தில் அமெரிக்காவில் முக்கிய துறைகள் செயல்படாமல் முடங்கி இருப்பது தொடர்கிறது. இதுபற்றி செனட் சபையின் ஜனநாயக கட்சி தலைவர் சுக் ஸ்கூமர், மெக்ஸிக்கோ சுவர் திட்டத்தை கைவிடாவிட்டால், செலவின பிரேரணை இன்றல்ல, அடுத்த வாரம் அல்ல, அடுத்த ஆண்டு அல்ல, ஒருபோதும் நிறைவேறாது எனக் கூறினார்.

மேலும் அவர், ஜனாதிபதி அவர்களே, அரசாங்கம் செயல்பட வேண்டும் என்றால் நீங்கள் சுவர் திட்டத்தை கைவிட்டாக வேண்டும். அமெரிக்க மக்களின் வரிப் பணம் தேவையில்லாமல் சுரண்டப்படுவதில் செனட் சபைக்கு விருப்பம் இல்லை என்றார்.

இந்த நிலையில் கிறிஸ்துமஸ் பண்டிகை விடுமுறையை கொண்டாடுவதற்கு புளோரிடா மாகாணத்துக்கு செல்லவிருந்த பயணத்தை டிரம்ப் ரத்து செய்து விட்டார். அவர் வொஷிங்டனில்தான் உள்ளார்.

இந்த பிரச்சினையில் சமரச பேச்சு தொடர்கிறது என துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் கூறுகிறார். ஆனால் டிரம்போ, அரசு துறைகள் முடக்கம் நீண்ட காலம் தொடரலாம் என எச்சரித்துள்ளார்.

# இந்தோனேஷிய சுனாமியில் பலியானோர் எண்ணிக்கை முந்நூறையும் தாண்டியது!

## காயங்களுடன் 1000 பேர் வரை மரித்துவமனைகளில்

ஜகார்த்தா,டிசெ.25

இந்தோனேசியாவை தாக்கிய சுனாமியால் பலியானோர் எண்ணிக்கை 281 ஆக உயர்ந்துள்ளது.

வெள்ளி இரவு அங்கு எரிமலை வெடிப்பால் சுனாமி ஏற்பட்டு பேரழிவை உருவாக்கி உள்ளது. அங்கு ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கு இடையே ஜாவா கடலை, இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கிற சுந்தா ஜலசந்தி உள்ளது. அந்த ஜலசந்தியில் அமைந்துள்ள அனக் கிரகட்டாவ் எரிமலையில் அன்று உள்ளூர் நேரப்படி இரவு 9.30 மணிக்கு வெடிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலச்சரிவால் இராட்சத சுனாமி அலைகள் எழுந்தன. இந்தப் பேரலைகள் அந்த நாட்டில் மிகப் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளன.

ஜாவா தீவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள டான்ஜங் லீசங் கடற்கரை உல்லாச விடுதி உள்ளிட்ட முக்கிய சுற்றுலா தலங்கள் பலவும் உருக்குலைந்து போய் விட்டன. ஜாவா தீவில், கடற்கரைகளையும், தேசிய பூங்காவையும் கொண்டிக்கும் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாக திகழ்கிற பாண்டெலாங்கில் சுனாமி பேரலைகள் 160 க்கும் மேற்பட்ட மக்களை வாரிச்சுருட்டிக்கொண்டு போய்விட்டன.

சுமத்ரா தீவில் செராங் மாவட்டம், தெற்கு லாம்பங், டாங்கமஸ் ஆகிய இடங்களில் பெருத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சுனாமி பேரலைகளில் கட்டடங்க




ளுடன் கார்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற வாகனங்களும் அடித்துச்செல்லப்பட்டன. சுனாமி பற்றி எந்த முன்னெச்சரிக்கையும் விடப்படவில்லை.

சுனாமியில் பலியானவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே உள்ளது. நேற்றைய நிலைவரப்படி, சுனாமியால் பலியானவர்கள் எண்ணிக்கை 281 ஆக உள்ளது. இதை இந்தோனேசிய தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பு உறுதி செய்துள்ளது. சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பில் 850 பேர் காயம் அடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசிய சுனாமியால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஐ.நா. பொதுச்செயலாளர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

# தொடர்ந்து கனலுகின்றது இந்தோனேஷிய எரிமலை



இந்தோனேஷியாவில் சுனாமியை ஏற்படுத்திய எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால், அது ஒரு புதிய சுனாமியை உருவாக்கக்கூடும் என்று அப்பகுதிக்கு அருகில் உள்ள கடலோர மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்களை கடலோர பகுதிகளில் இருந்து உள்பகுதிகளுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெள்ளி இரவு சுனாமியை ஏற்படுத்திய எரிமலை வெடிப்புக்கு பிறகு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் அனாக் க்ரகடோவா தீவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்புகளின் காரணமாக அப்பகுதிகள் புகைமண்டலமாக காட்சியளித்தது.

சுமத்ரா மற்றும் ஜாவா தீவுகளுக்கு இடையே உள்ள சுந்தா நீரிணையில் இந்த எரிமலை வெடிப்பு தொடர்பாக சார்டர் விமானம் ஒன்று எடுத்த காணொளி பதிவு இந்த பேரிடரின் தாக்கத்தை பதிவு செய்வதாக அமைந்துள்ளது.

மீண்டும் சுனாமி ஏற்படும் அச்சத்தால் மக்களை கடற்கரைக்கு அருகில் இருக்கும் பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு பேரிடர் மேலாண்மை முகமையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரை மற்றும் தேசிய பூங்காவுக்கு புகழ்பெற்ற ஜாவாவில் உள்ள பண்டெக்லாங் மாவட்டத்தில் 100க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

# ஈரானில் தொழிலதிபர் தூக்கில் இடப்பட்டார்!

## போலி ஆவணம் மூலம் வங்கிக் கடன் பெற்றவராம்



தெஹ்ரான்,டிசெ.25

ஈரானில் போலி ஆவணம் பயன்படுத்தி கடன் வாங்கியவர் என்ற குற்றச்சாட்டில் பிரபல தொழில் அதிபர் தூக்கிலிடப்பட்டார்.

ஈரான் நாட்டின் பிரபல தொழில் அதிபர் ஹமித் ரேசா பக்கெரி தார்மனி (வயது 49). இவர் 'பிட்டுமென் சுல்தான்' என்ற செல்லப்பெயரால் அழைக்கப்பட்டு வந்தார்.

இவர் கடன் பெறுவதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்து அளித்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

'ஒஸ்பால்ட்' என்று அழைக்கப்படும் நிலக்கீல் தயாரிக்க பயன்படுகின்ற 'பிட்டுமென்' என்ற பொருளை விற்பனை செய்வது ஈரானின் லாபகரமான தொழில். இந்த 'பிட்டுமென்'னைக் கொள்முதல் செய்வதற்காகத்தான் அவர் கடன்பெற போலி ஆவணங்கள் தயாரித்து அளித்திருக்கிறார்.

இந் புகாரின்பேரில் இவர் கடந்த 2014 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

100 மில்லியன் டாலர் (சுமார் 1,800 கோடி ரூபா) மதிப்பிலான 'பிட்டுமென்'னை, அவர் மோசடி செய்தும், லஞ்சம் கொடுத்தும் கடன்பெற்றுக் கொள்முதல் செய்துள்ளார் என்பது குற்றச்சாட்டு. இந்த வழக்கின் விசாரணை ஈரான் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளி பரப்பானது. அவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து இந்த வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இப்போது அவர் தூக்கிலிடப்பட்டார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. இதுபற்றிய கூடுதல் தகவல் தெரியவரவில்லை.

ஈரானில் கடந்த மாதம் இரண்டு தொன் அளவுக்கு தங்க நாணயங்களைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் நாணய சுல்தான் என அழைக்கப்பட்ட தொழில் அதிபர் ஒருவர் தூக்கிலிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# அர்த்தமுள்ள இயேசுபிறப்பு



'அருள்மொழி வல்ல திரு அவதாரன் பாவங்கள் நீக்கும் தேவகுமாரன் கைத் துணி ஒன்றில் கண்களைத் திறந்து ஆநிரைத் தொழுவில் அவதரித்துள்ளான்' (இயேசு காவியம் – கவியரசர் கண்ணதாசன்).

இந்த பனிக்காலத்தில், விடுமுறை நாள்களில், மார்கழி 25ம் நாளில், மனுக்குல மீட்பராம் இயேசுவின் பிறப்பு விழாவை அகில உலகும் கொண்டாடுகின்றது. இந்த நாட்களில் பாலன் குடிலை அலங்கரிக்கின்றோம். பரிசுப் பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றோம். வாழ்த்துச் செய்திகளை மற்றவர்களுக்கு தெரிவிக்கின்றோம். வாண வேடிக்கைகளைச் செய்கிறோம். குதூகலமாகக் கொண்டாடுகின்றோமே எதற்காக?

இறைவன் இன, மத, மொழி, சாதி பேதங்கள் இன்றி தனது பிறப்பால் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்ததால். இந்த பூமி பந்தில் ஆயிரம், ஆயிரம் அரசர்கள், அரசியல், மற்றும் மதத் தலைவர்கள், புரட்சித் தலைவர்கள், விடுதலை வீரர்கள் எல்லாம் தோன்றி மறைந்தார்கள். இன்னும் உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் மனிதன் பிறந்து கொண்டிருக்கிறான். இவர்கள் எல்லோருடைய பிறப்பையும் விட இயேசு பெருமானின் அவதாரம் அதிசயமானது. ஏனென்றால், அவருடைய பிறப்பு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முன்னறிவிக்கப்பட்ட, காலங்காலமாக இஸ்ராயேல் மக்கள் எதிர்பார்த்த ஒரு நிகழ்வு. அந்த வகையில், எசாயா இறைவாக்கினர் தனது நூலில் (எசா7:14) 'இதோ கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவன் எம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்' என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார்.

இங்ஙனம் பழைய ஏற் பாட்டில் எல்லாப் பக்கங்களிலும் அவர் நிழல் தெரிந்தது என்றால் அது மிகையாகாது. இயேசு ஆண்டவர் மனித சுபாவம் அணிந்ததன் மூலம் மனிதத்தின் மாண்பை உயர்த்தினார். அவருடைய பிறப்பு ஒரு புராணக் கதையோ, இதிகாசமோ அல்ல. இது அகுஸ்து சீசர் ஆட்சியில் யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊரில் நடந்த ஒரு வரலாற்று நிகழ்வு (லூக் 2:1இ4 –5). இயேசுவின் பிறப்புதான் காலத்தையே பிரித்தது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இத்தகைய சிறப்புக்கள் நிறைந்தது இயேசு நாதரின் பிறப்பு.

தூய யோசேப் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த மரியாவைக் கூட்டிக்கொண்டு, சனத்தொகையைக் கணக்கெடுக்க தனது சொந்த ஊரான பெத்லகேமுக்கு போகிறார். அங்கு அவர்களுக்கு விடுதியில் இடம் கிடைக்கவில்லை. எளிமையை விரும்பும் இறைவன் ஏழைகளின் தோழனாக மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார்.

இதையே தூய பவுலடியார் 'அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்' என அழகாகக் கூறுகிறார். வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறைவன், அமைதியின் அரசர் என வர்ணிக்கப்பட்டவர் ஏழைகளில் ஒருவராகத்தன்னை இணங்கண்டு கொண்டார். யூத சமுதாயத்தில் பரிசேயர், சதுசேயர், சட்டம் கற்றுத் தேர்ந்தோர் மெசியா எங்கே, எப்போது பிறப்பார் என்று அறிந்திருந்தார்கள்.

ஆனால் அவரது மாட்சியைக் காண அவர்கள் அழைப்புப் பெறவில்லை. சமுதாயத்தாலே புறக்கணிக்கப்பட்ட இடையர்களும், தாம் கற்றது கையளவு என்று தம்மைத் தாழ்த்திக் கொண்ட ஞானிகளும் தான் அவரைக் காணும் பாக்கியம் பெற்றார்கள். இந்நிகழ்வு அகந்தை கொண்டவர்களுக்கு கடவுளின் தரிசனம் கிடைப்பதில்லை என்பதற்கு ஒரு சாட்சி. அத்தோடு கடவுளை விட்டுப் பிரிந்து வாழும் போது நாம் உயிரற்ற பிணமாக, சடப்பொருளுக்குச் சமமாகத் தான் வாழ்கிறோம். இறைவனை விட்டு ஓடாமல், இறைவனை நோக்கி நம்வாழ்வை முன்னெடுக்கின்ற போதுதான் வாழ்வு நிறைவு பெறுகிறது என்ற செய்தியையும் தருகிறது.

மரியின் மைந்தன் இயேசு, அனைத்துலக மீட்பராக இந்த உலகத்தில் பிரவேசித்தவர். அவர் அரசியல் அடக்கு முறையிலிருந்து யூதர்களுக்கு விடுதலை கொடுக்க வரவில்லை. மாறாக பாவ அடிமைத்தனத்திலிருந்து நம் அனைவரையும் விடுவிக்க வந்தார். இன்றைய உலகில், போதைப் பொருள்களுக்கு அடிமையாகும் நிலை, தொழில்நுட்பக் கருவிகளின் அதீத, தவறான பாவனை, இயற்கையை அழித்தல், வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற பாவங்கள் முடிவிலிகளாகப் பெருக்கெடுத்துக் கொண்டே இருக்கின்றன. தூய ஏரோணிமுஸ் 'மனி தன் முழுமையாக வாழ்வது கடவுளுக்கு மகிமை (The glory of God is human being fully alive) என்று மொழிந்தார்.

பிறந்துள்ள பிஞ்சுப் பாலகன் இயேசுவும் ஒழுக்கம் நிறைந்த வழியில், நன்னெறியில் வாழ்ந்துஇ அவர் கொண்டு வந்த மீட்பை நாம் சுவைக் கவும், இறையாட்சியை இம் மாநிலத்தில் நிறுவவும் நமக்கு அழைப்பு விடுக்கிறார். அவருடைய பிறப்பால் விண்ணகமும், மண்ணகமும் மகிழ்ந்தது என திருவிவிலியம்; கூறுகிறது (லூக் 2:10, 13-14). அவர் மகிழ்ச்சியை எமக்குப் பரிசாகத் தந்தார்.

இந்த கிறிஸ்மஸ் பண்டிகை அந்த மகிழ்ச்சியை அனைவரோடும் பகிர்ந்து கொள்ள நம்மை அழைக்கிறது. நாம் மற்றவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் போதுதான் நாமும் நிம்மதியைஇ நிறை மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது நிதர்சனமான உண்மை. எனவே, இந்த கிறிஸ்து பிறப்பு எல்லோருக்கும் சுபீட்சமான புது வாழ்வை கொடுக்க வேண்டி, வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து அர்த்தமுள்ள தாக்குவோம்.

**'ஏர்பிடித்து வன்னிலத்தை உழுது வாழும்**
**ஏற்றமுள்ள உழவர் தம் உழைப்பில் உள்ளான்.**
**பார் விளங்கச் சாலைக்குக் கல்லுடைக்கும்**
**பாட்டாளிக் கூட்டத்தின் நடுவில் இறைவன் உள்ளான்' (கீதாஞ்சலி -மகாகவி இரவீந்திரநாததாகூர்).**

**அருட்.பணி ம.மரிசுதன் செ.தா**
**அருள் ஆச்சிரமம்,**
**யாழ்ப்பாணம்.**

# விடுதலையை, மீட்பை சலரும் அனுபவிப்போம்



இயேசு பிரானின் பிறப்புவிழாவானது கிறிஸ்மஸ் விழா என்ற பெயரில் உலக மெங்கும் மிகுந்த உற்சாகத்தோடு கொண்டாடப்பட்டுவருகிறது. கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படைச் செய்தியே கடவுள் மனிதன் ஆனார் என்பதாகும். இதனையே திருவிவிலியத்தில் 'வாக்கு மனிதர் ஆனார்: நம்மிடையே குடிகொண்டார்' (யோவான் 1:14) என்று யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடுகின்றார்.

கடவுள் என்றால் அனைத்தையும் கடந்தவர். கால, தேச வர்த்தமானங்களைக் கடந்தவர். அப்படியாக அனைத்தையும் கடந்தவர் இன்று காலத்திற்கு, இடத்திற்கு தன்னைக் கட்டுப்படுத்தியவராக மனிதகுல வரலாற்றில் தன்னை இணைத்துக்கொள்கிறார். ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட இனத்தில், குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட பெற்றோருக்கு மகனாக, நாம் தொட்டுணரக்கூடிய ஒரு மனிதக் குழந்தையாகப் பிறக்கின்றார். இதைத்தான் கிறிஸ்துவின் மனுவுடலேற்பு என்று கிறிஸ்தவ இறையியல் குறிப்பிடுகின்றது.

கிறிஸ்துவின் இந்த மனுவுடலேற்பு என்பது கடவுள் மனுக்குலத்தின்மேல் கொண்ட அளவற்ற அன்பின் அடையாளமாக இருக்கின்றது. ஆகவே கிறிஸ்மஸ் விழா என்பது கடவுளின் அன்புக்கு நாம் எடுக்கும் விழா ஆகும். கடவுள் மனிதனானது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகின்ற நற்செய்தியாகும். இதை நாம் கொண்டாட வேண்டும். ஆனால் இந்தக் கொண்டாட்டம் வெளியரங்கமானதாக மட்டும் நின்றுவிடாமல் உள்ளார்ந்ததாகவும் அமைய வேண்டும். கிறிஸ்து தன்னுடைய பிறப்பின் ஊடாகக் கொண்டுவந்த விடுதலையை, இரட்சிப்பை, மீட்பை அனுபவிக்கின்ற மகிழ்வை நாம் பெறவேண்டும். அதுதான் உண்மையான மகிழ்ச்சி.

ஆகவே இந்த மகிழ்வின் விழா நமது பாவங்கள், சாபங்களில்; இருந்து நமக்கு விடுதலையைத் தருவதாக, இரட்சிப்பின், மீட்பின் அனுபவத்தை நம்மில் ஏற்படுத்துவதாக!

உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் புது வருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் ஒவ்வொருவரையும், உங்கள் குடும்பத்தையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

**மன்னார் ஆயர்**
**இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை**

# பாலன் பிறப்பைக் கொண்டாடி மகிழ்கின்றோம்

**உலகம் எல்லாம் மகிழும் ஒரு நாள்**
**ஒளியாய் இயேசு உதித்த பொன்னாள்**
**நிலவும் வானும் கடலுத் அலையும்**
**மலையும் நதியும் மண்ணும் மகிழ்ந்தநாள்**
**கலகம் நின்று அமைதி நிலவும்**
**கருணை வள்ளல் பிறந்த நன்னாள்**
**காலம் காலமாய் காத்திருந்த மெகியா**
**ஏழைக் கோலமாய் மண்ணில் பிறந்தநாள்**

**மாட்டுத் தொழுவில் பிறந்த மன்னனை**
**வீட்டுத் தொழுவினில் வைத்து மகிழ்கின்றோம்**
**பாட்டுக்கள் பாடி ப(பா)ப்பா உடையணிந்து**
**பாலகன் இயேசுவை பாடி மகிழ்கின்றோம்**
**கொட்டும் பனியில் ஆலயம் சென்று**
**கோமகன் பிறப்பை கொண்டாடி மகிழ்கின்றோம்**
**பட்டாசு வெடித்து வாணங்கள் விட்டு**
**பாலன் பிறப்பை கொண்டாடி மகிழ்கின்றோம்.**

**உயிலூர். திருமதி.ஆன்நிலோ சுபாகரன்**
**மன்னார்.**

காலைக்கதிர்
Kalaikkathir



# யானையுடன் மோதிய சொகுசு பஸ்!

கொழும்பு, டிசெ. 25

மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த அதி சொகுசு பஸ் நேற்று முன்தினம் நள்ளிரவு புத்தளத்துக்கு அருகில் யானையுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த இந்த பஸ் வீதியில் நின்ற யானை ஒன்றுடன் மோதியது.

விபத்தில், யானை உயிரிழந்தது. பஸ்ஸில் பயணித்தவர்கள் பலருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸூம் முழுமையாகச் சேதம் அடைந்துள்ளது. (ஐ)





# இலங்கைக்கு நிதி குறைக்க அமெரிக்க செனட் எதிர்ப்பு



இலங்கைக்கான நிதி உதவிகளை குறைக்கும் திட்டத்திற்கு அமெரிக்க செனட் குழு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இலங்கைக்கு 43 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவது தொடர்பான நிதி ஒதுக்கீட்டு பிரேரணை நேற்று முன்தினம் அமெரிக்காவின் செனட் நிதி ஒதுக்கீட்டுக்கான குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது.

35 மில்லியன் டொலர் பொருளாதார உதவி நிதியையும் 6.8 மில்லியன் டொலர் பெருக்கமல்லாத மற்றும் தீவிரவாதத்துக்கு எதிரான நிதியையும், 5 இலட்சம் டொலர் வெளிநாட்டு இராணுவ நிதியையும், இராணுவத்தினருக்கான பயிற்சிக்கு, 5 இலட்சம் டொலரையும் உள்ளடக்கியதாக இந்த நிதி உதவி திட்டம் அமைந்திருந்தது. இதன்போது இலங்கைக்கான உதவிகளை 92 வீதத்தால் குறைக்கும் திட்டத்தை ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்நிலையில் இலங்கையின் பூகோள முக்கியத்துவம் கருதி இந்த நிதி குறைப்பு திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென செனட் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இலங்கையில் மேலதிக ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு ஆதரவளிக்கும் முயற்சிகளை அங்கீகரித்த செனட் குழு, நீதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதையும் ஊக்குவிப்பதாக தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தை செனட்டின் நிதி ஒதுக்கீட்டுக் குழு அங்கீகரித்துள்ளபோதும், இலங்கைக்கான நிதிஒதுக்கீடு தொடர்பான யோசனையை ஒத்திவைத்துள்ளது. (ஐ)

# வெள்ளம் பாதித்த மக்களுக்கு வடக்கு அவைத்தலைவர் உதவி



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணத்துக்காக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் தனது ஒரு மாதக் கொடுப்பனவான ரூபா ஐம்பதாயிரத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் வழங்கினார்.

அதேவேளை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொருளாளர் கனகசபாபதியும் ரூபா ஐம்பாதாயிரத்தை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென வழங்கினார். (ஐ)

# மொட்டுக் கட்சியில் தான் இணையவேயில்லையாம்!




கொழும்பு, டிசெ. 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையைத் தான் பெற்றுக்கொண்டதாக வெளிவரும் செய்திகள் உண்மைக்கு புறம்பானதென மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர் தான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள வாரஇதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமை அட்டையை ஏற்றுக்கொண்டதாக வெளியாகிய படம் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ, அது உறுப்பினர் அட்டையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான படம் அல்ல. பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்ளும்போது எடுக்கப்பட்ட படம். அந்த அட்டையில் எனது பெயர் அச்சிடப்படவில்லை என்பதால் நான் வைத்திருக்கும் ஆவணம் உறுப்பினர் அட்டை அல்ல.

உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தல் மற்றும் உறுப்புரிமை வழங்குதல் என்பன இருவேறு விடயங்களாகும். நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். கட்சியின் மூத்த ஆலோசகராக இருக்கிறேன். மூத்த ஆலோசகர்கள் பக்கம் மாறமாட்டார்கள். அவர்களுக்கு ஓய்வு இல்லை – என்றார். (ஐ)

# பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மஸ்தான் எம்.பி. நேரில் விஜயம்



திடீரென ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன.

சு.க. நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் கடும் மழை காரணமாக பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சென்று பார்வையிட்டு அவர்களுக்கான தேவைகள் தொடர்பில் கேட்டறிந்ததோடு அவற்றுக்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்

குறிப்பாக முல்லைத்தீவில் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள மன்னாகண்டல், வசந்தபுரம் பகுதி மக்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள மன்னாகண்டல் பாடசாலை மற்றும் பொதுநோக்கு மண்டபங்களில் தங்கியுள்ள மக்களைச் சென்று சந்தித்து உணவுப் பொருள்களும் வழங்கினார். (ஐ)

# மஹிந்தவின் எதிர்காலம் தெரிவுக்குழுவின் கையில்

## கூறுகிறார் ராஜித சேனாரத்ன



கொழும்பு, டிசெ. 25

பொதுஜன பெரமுன கட்சியில் அங்கத்துவம் பெற்ற மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல எம்.பிகளின் அரசியல் எதிர்காலம் தெரிவுக்குழுவில் முடிவாகும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். நீர்கொழும்பு ஐ.தே.க தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றிய அவர், 225 எம்.பிகள் கையொப்பமிட்டு ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கக் கோரினாலும் தான் அவரை நியமிக்கப் போவதில்லை என ஜனாதிபதி கூறியிருந்தார். வேறு நபரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரை செய்திருந்தார்.

இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவை அவர் பிரதமராக நியமித்தார். நாம் நியமித்த ஜனாதிபதியின் சிறகுகள் வெட்டப்பட்டுள்ளன. அவர் பறக்க நினைத்தாலும் அவரால் பறக்க முடியாது. நிறைவேற்று ஜனாதிபதி முறையிலுள்ள மோசமான தன்மை பற்றி அமைச்சரவை நியமிப்பது தொடர்பான இறுதி பேச்சின் போது நான் ஜனாதிபதிக்கு விளக்கினேன். முன்பிருந்த ஜனாதிபதிகள் தமக்குள்ள அதிகாரத்தை பிரயோகித்தனர். தற்போதைய ஜனாதிபதி தனக்கு இல்லாத அதிகாரத்தைப் பயன்படுத்தினார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். இது தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. எம்.பி பதவி இரத்தாகும் என்ற அச்சத்தில் மஹிந்த இருக்கிறார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட மறுநாள் அவர் மொட்டுக் கட்சியில் அங்கத்துவம் பெற்றார். மஹிந்த தமது கட்சி உறுப்பினர் எனக் கட்சிச் செயலாளரினூடாக ஜனாதிபதி, சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். அவர் மொட்டுக் கட்சியில் அங்கத்துவம் பெற்ற படங்கள் ஊடகங்களில் வெளியிடப்பட்டன. தற்பொழுது கடிதம் வெளியிட்டு எந்தப் பயனும் கிடையாது.

சட்டத்தின் முன்னிலையில் இந்தப் பிரச்சினை தீரும். பொதுஜன பெரமுனயில் தான் அங்கத்துவம் அன்றி விண்ணப்பமே பெற்றதாக தற்பொழுது கூறுகின்றனர். 50 மொட்டுக் கட்சி எம்.பிக்களின் நிலைமை மோசமாக உள்ளது – என்றார்.

# பந்துவீச்சாளர் தரவரிசை முதல் இடத்தில் ரபாடா



சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில் தென்னாபிரிக்காவின் கார்கிஸோ ரபாடா 882 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இவரையடுத்து, இங்கிலாந்தின் முன்னணி வீரராக ஜேம்ஸ் அண்டசன், 874 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்காவின் வெரோன் பிளாண்டர், 826 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் அப்பாஸ், 821 புள்ளிகளுடன் நான்காவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 796 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளார். இந்தியாவின் மற்றொரு வீரரான அஸ்வின் 778 புள்ளிகளுடன் ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் சுழற்பந்து வீச்சாளரான நதன் லியோன், 7ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்திய அணிக்கெதிரான இரண்டு போட்டிகளில் மொத்தமாக 16 விக்கெட்டுக்கள் கைப்பற்றிய நதன் லியோன், பெர்த் டெஸ்ட் போட்டியில், 8 விக்கெட் வீழ்த்தி ஆட்டநாயகன் விருதையும் வென்றார். இந்த பின்னணியில் அவர் இந்த ஏற்றத்தைக் கண்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பெட் கம்மின்ஸ் 761 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும், ஆஸ்ரேலியாவின் ஜோஸ் ஹசில்வுட் 758 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலும், பாகிஸ்தானின் யாசிர் ஷா 757 புள்ளிகளுடன் பத்தாவது இடத்திலும் உள்ளனர்.

(ஐ)

# அன்று தவறு செய்துவிட்டேன்! ஒப்புக்கொண்ட சர்ச்சை நடுவர்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது ரி-20 போட்டியில் தனது தீர்ப்பு தவறானது தான் என ஒப்புக்கொண்டுள்ளார் வங்கதேச நடுவரான தன்வீர் அகமது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் போது மேற்கிந்திய தீவுகள் அணி வீரரான ஓஷானே தோமஸ் பந்துவீசும் போது இரண்டு முறை நோ போல் என வங்கதேச நடுவரான தன்வீர் அகமது அறிவித்தார்.

இரண்டாவது முறையின் போது, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அணித் தலைவர் கார்லோஸ் பிராத்வெயிட் எதிர்ப்பு தெரிவித்தார்.

மேலும் இரண்டு பந்துகளும் 'நோ போல்' அல்ல என ரீப்ளேயில் தெரியவந்ததால், கார்லோஸ் பிராத்வெயிட் கோபப்பட போட்டி 8 நிமிடம் தாமதமானது.

இந்நிலையில் இதுகுறித்து பேசிய நடுவர் தன்வீர் அகமது, பந்துவீச்சாளர்கள் வேகமாக பந்து வீசும் போது லைனில் சரியாக காலை வைக்கிறார்களா என பார்ப்பது கடினம்.

சர்வதேசப் போட்டிகளுக்கு நான் புதிது, முதல்தரப் போட்டிகளில் இது போன்று என் மீது புகார்கள் இல்லை.

அன்று எனக்கு மோசமான நாளாக அமைந்துவிட்டது, அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறேன், விரைவில் மீண்டும் வருவேன் எனத் தெரிவித்துள்ளார்.

# கிறிஸ்மஸ் அற்புதமான விழா



உலகில் சந்திப்புக்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. மலர் மணத்தைச் சந்திக்கின்றது. வானம் நிலவைச் சந்திக்கின்றது. நிலம் நீரைச் சந்திக்கின்றது. கடல் கரையைச் சந்திக்கின்றது. இவை எல்லாம் அழகான சந்திப்புக்கள்தான். ஆனால் இவை எல்லாவற்றையும்விட அற்புதமான, அதிசயமான ஒரு சந்திப்பு வரலாற்றில் நடை பெற்றது. அதுதான் விண்ணகம் மண்ணகத்தைச் சந்தித்தது! கடவுள் மனிதனைச் சந்தித்தது! கடவுள் இந்த மண்ணில் மனிதனாக மலர்ந்தது! இதைத்தான் கிறிஸ்மஸ் விழாவாக நாம் ஆண்டுதோறும் கொண்டாடுகின்றோம்.

மனித வாழ்வில் சந்திப்புக்கள் பலவிதம். சில சந்திப்புக்கள் சந்தோசத்தைக் கொடுக்கின்றன. சில சந்திப்புக்கள் சங்கடங்களை ஏற்படுத்துகின்றன. கடவுள் மனிதனைச் சந்தித்ததை திருவிவிலியம் 'பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி' என்று குறிப்பிடுகின்றது. வானதூதர்கள் இடையர்களுக்குக் கூறும் வார்த்தையில் நாம் இதனைக் காண்கின்றோம். 'இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்' (லூக். 2: 10,11).

கடவுள் மனிதனைச் சந்தித்த இந்த அற்புதமான விழா நமக்கு ஓர் ஆழமான, அழுத்தமான செய்தியைத் தருகின்றது. அதாவது நாமும் மற்றவர்களைச் சந்திக்க வேண்டும். தேவையில் இருக்கும் மனிதர்களை, நோயில், முதுமையில், தனி மையில் இருக்கும் மனிதர்களை நாம் சந்திக்க வேண்டும். இத்தகைய சந்திப்புக்களை நாம் மேற்கொள்ளும்போது சக மனிதர்கள் வாழ்வில் நாம் மகிழ்வை, புன்னகையை ஏற்படுத்துகின்றோம். அதன் வழியாக நாமும் மகிழ்ச்சியடைகின்றோம், மனநிறைவு பெறுகின்றோம்.

**அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்,**
**மன்னார் மறைமாவட்டக் குரு.**

# நித்திய வெளிச்சத்தில் தேசம் விடியட்டும்...!



உலகத்தின் ஒளியாக கருணை மைந்தன் யேசுபாலன் பிறப்பெடுத்து வந்த நத்தார் தினத்தின் வருகை நித்திய வெளிச்சத்தை தேச மெங்கும் பரப்பட்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த செய்தியில் –

இது எமக்கென்று வாக்களிக்கப்பட்ட பூமி. அதன் உரிமையை வெல்லும் திசை நோக்கி மக்களை வழிநடத்திசெல்லவே நாம் இந்த பூமிக்கு வரவழைக்கப்பட்டவர்கள். எமது நிலங்கள் எமது மக்களுக்கே சொந்தம். எமது மக்களின் மனங்களில் நித்திய மகிழ்ச்சியும், எமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் நிரந்தர சமாதானமும் நீடித்து நிலவ வேண்டும்.

எமது மக்களின் நியாயமான உணர்வுகளுக்காக நாம் என்றும் பரிசுத்தமாகவே உழைத்து வருகின்றோம்.

ஆகவேதான்,.. துயரச்சிலுவைகளை எமது மக்கள் சுமந்து நடந்த இரத்தப்பலிகளுக்கு மத்தியிலும் எமது மக்களுடனேயே நாமும் இடையறாது வாழ்ந்து வந்திருக்கிறோம்.

நிரந்தர சமாதானம்,.. நீடித்த சமவுரிமை,.. வரலாறெங்கும் துயரச் சுமைகளை சுமந்த எமது மக்களுக்கு ஒரு நியாயத்தீர்ப்பு,... பஞ்சம்,. பசி,..பட்டினி இல்லாத,.. எமது சொந்த நிலங்களை இழந்து வாழும் துயர்கள் இல்லாத,.. எவரையும் எவரும் அடிமைகள் என்று கொள்ளாத,.. யாரும் சிறைகளில் வாடும் கொடுமைகள் இல்லாத, அபிவிருத்தி இல்லையென்ற அழுகுரல்கள் கேட்காத புதியதொரு சமாதான இராட்சியத்தையே நாம் விரும்புகின்றோம். இவைகளே எமது மக்களின் ஆழ்மன விருப்பங்களும் ஆகும்.

ஆனாலும் எமது மக்களின் விருப்பங்கள் யாவும் வெறும் கற்பாறைகளில் மட்டும் விதைக்கப்பட்ட விதைகளாகவே இருந்து வந்திருக்கின்றன.

நிரந்தர சமாதானத்தை நோக்கிய எமது மக்களின் விருப்பங்கள் யாவும் சாத்தான்களின் தடைகளால் நிறைவேறாத கனவுகளாகவே இன்று வரை முடங்கிப்போயிருக்கின்றன.

எமது நிலத்தில், இனி எமக்கு மக்கள் வழங்கும் ஆணையின் பலத்தில் ஒளி பிறந்த தேசமாக எமது சொந்த பூமியை மாற்றிட உறுதிகொண்டு எழுவோம். பிறந்திருக்கும் நத்தார் தினத்தை நம்பிக்கையோடு கொண்டாடி மகிழ்வோம்.

**டக்ளஸ் தேவானந்தா**
**செயலாளர் நாயகம்,**
**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தக் காலத்தைவிட மிகச் சிறந்த காலம் தோன்றப் போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2018ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதிலும் இன, மத, நிற, மொழி வேறுபாடின்றி கொண்டாடப்படும் வேளை பாலக இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் இவ்விழாவைக் கொண்டாடும் அனைவரோடும் என்றும் இருப்பதாக என இறை ஆசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

இந்தப் பெருவிழாவின் போது உலகம் முழுவதிலும் பல்வேறு மொழிகளிலும் பாடப்படும் ஒரே இறைவார்த்தை 'உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!' – என்பதாகும் (லூக்காஸ் 2:13-14)

இந்தப் பெருவிழாக் காலத்தில் அவருக்கு உகந்தவர்களாகிய எல்லோருக்கும் அமைதி உண்டாக்கும் கருவிகளாகவே நாம் அழைக்கப்படுகிறோம்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் இலங்கை நாட்டை அச்சுறுத்திய 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி' என அழைக்கப்படும் அரசியல் முறுகல் நிலை ஓரளவு சுமுகமாக தீர்ந்துள்ளமை மனதிற்கு நிம்மதி தருகிறது. ஜனநாயகம் வென்றுள்ளது என வரவேற்போம்.

இது ஒரு தேசியப் பிரச்சினை என்கின்ற வகையில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையும் யாழ். மறைமாவட்ட ஆயர் என்கின்ற வகையில் நாமும் இப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட வேண்டுமென இறைவரம் வேண்டுமாறு இறைமக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். யாழ் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் வேண்டுதல் செய்தனர். எதிர்பார்த்துப் பயந்த பயங்கர முடிவுகளும் இன்றிப் பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது. இறைவனுக்கு நன்றி. இறைவரம் வேண்டிய அனைவருக்கும் அன்பான நன்றிகள்.

தேசிய ஜனநாயக முன்னனி உதயமாகி நிறைவேற்று அதிகாரத்துக்கு முடிவு கட்டவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது வரவேற்கப்படவேண்டியதே. இலங்கை நாட்டின் எல்லா பிரஜைகளுக்கும் நீதியான, சமத்துவமான, அமைதியான வாழ்வு கிடைக்க அனைத்து அரசியல்வாதிகளும் உழைக்க வேண்டும். தனிப்பட்ட அதிகாரம், பதவி, பட்டம் என்பன எல்லாம் இங்கு முக்கியமல்ல.

ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி – இது ஓர் முடிவல்ல. மாறாக இது ஓர் ஆரம்பமே. எதிர்பார்த்து நம்பி இருந்த அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படாமலே போய்விட்டது. நல்லெண்ண அரசு நீதியாகச் செயற்படும் என நம்பி ஏமாந்து விட்டோம்.

ஆனால், தமிழ் அரசியற் கட்சிகள் பணத்திற்காகவும் பதவிக்காகவும் விலை போகாத வகையில் நாம் இன்று முன்பைவிட இன்னும் அரசியற் பலம் மிக்கவர்களாகவே உள்ளோம்.

தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினைக்குத் தீர்வு காண இக்காலத்தைவிட மிக சிறந்த காலம் தோன்றப் போவதில்லை. இந்த நிலை தமிழ் மக்கள் இலங்கையின் பல பகுதிகளில் போர்க் காலத்தில் அனுபவித்த கோர அனுபவங்கள் வழியாகவே வந்தது என்பது உண்மை.

தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் பெயரால் அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறோம். தயவு செய்து தமிழ் மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பணயம் வைத்து அரசியல் நடத்தாதீர்கள். தமிழ் மக்கள் நலனுக்காக உங்கள் அரசியல் லாபங்கள் அனைத்தையும் தியாகம் செய்யுங்கள். இப்போது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட எட்டப்படாத எந்த முடிவும் வருங்காலத்தில் எட்டப்படும் என்ற எந்த உத்திரவாதமும் இல்லை. தமிழ் மக்களுக்கு எதிரான அல்லது சாதகமற்ற உங்கள் எந்த நிலைப்பாட்டையும் இனியும் தமிழ் மக்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என உறுதியாகச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

இலங்கை நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லீம் இனங்கள் வாழ்கின்றன என்பதை உறுதிப்படுத்தி அவர்கள் சம உரிமையோடு வாழக்கூடிய கூடிய சுதந்திர வாழ்விற்கான நீதியோடு கூடிய நிரந்தர தீர்வைக் கொண்டு வரக்கூடிய – மாற்றப்பட முடியாத – புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதற்கான செயற்பாட்டிற்காக அரசியல் வாதிகள் மட்டுமல்லர். சம்பந்தப்பட்ட அனைவரும் கண்டிப்பாக பயணியாற்ற வேண்டுமென அழைப்பு விடுகிறோம்.

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்ற வார்த்தைகளை எமதாக்கி வாழ அழைப்பு விடுத்து இறையாசீருடன் கிறிஸ்மஸ், 2019 புதுவருட வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

## கட்சிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உப தலைவரான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

2015 ஜனவரி 08 ஆம் திகதி நல்லாட்சி உதயமான பின்னர் நிதி அமைச்சராக ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டார். காலப்போக்கில் அவரிடமிருந்து நிதி அமைச்சுப் பறிக்கப்பட்டு, வெளிவிவகார அமைச்சு ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் பிணைமுறி விவகாரம் சூடுபிடித்ததால் தாமாகவே முன்வந்து அமைச்சுப் பதவியை துறக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு நேர்ந்தது. அதனால், அதன் பின்னர் ஆளுங்கட்சியின் பின்வரிசை எம்.பியாக செயற்பட்டார். 'சூழ்ச்சி' மூலம் ஆட்சி கவிழும்வரை எம்.பியாகவே செயற்பட்டார்.

எனினும், புதிய அரசில் ரவிக்கு நிதி அமைச்சுப் பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எதிர்ப்புகள் வலுத்ததால் மங்களவிடமே நிதி அமைச்சு கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் வினவியபோதே ரவி கருணாநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சர்வதேச மட்டத்தில் எனக்கு நற்பெயர் இருக்கின்றது. ஆனால், கட்சியிலுள்ள ஒருசிலர் அதை ஏற்கமறுக்கின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறானதொரு நிலை ஏற்படுவதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காரணம் அல்லர். கட்சிக்குள் இருக்கும் ஒரு சிலரே சூழ்ச்சி செய்தனர்.

எனினும், எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இவர்கள் எவ்வாறு செயற்படுகின்றனர் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் எல்லாம் ஓரணியில் நிற்கும் போது, ஒற்றுமையை குழப்பும் நோக்கிலேயே இத்தகைய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. – என்றும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார் என சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## 27 இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க தலைமையில் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சிறிகொத்தாவில் நடைபெறவுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படும் முக்கியத்துவமிக்க கூட்டமென்பதால் கட்டாயம் இதில் பங்கேற்குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் தற்போது கூட்டணியாக இயங்கும் ஐக்கிய தேசிய முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவுசெய்வதற்கு மத்திய செயற்குழு கடந்த வெள்ளியன்று அனுமதி வழங்கியது.

இதன்படி புதிய அரசியல் கூட்டணியை, 'தேசிய ஜனநாயக முன்னணி' என்ற பெயரில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது குறித்து இதன்போது இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, அடுத்தாண்டு நடைபெறவுள்ள தேர்தல்கள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது. (ஐ)

## வெள்ள நிவாரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் கிடைக்கவில்லை எனவும் வடமராட்சி மீனவர்கள் கவலை தெரிவித்து உள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த பல வாரங்களாகச் சீரற்ற காலநிலை காணப்படுவதால் கடல் கொந்தளிப்பாக உள்ளது. இதனால் கடற்றொழில் பாதிக்கப்பட்டு உள்ளது. கடற்றொழிலை நம்பியுள்ள எமது பிரதேசத்தில் நூறுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன.

அவர்கள் தமது வாழ்வாதாரத்துக்குப் பகுதி நேர வேலைகளுக்கு சென்றே தமது குடும்பங்களைக் காப்பாற்றி வருகின்றனர். அதனால் பல குடும்பங்கள் மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இதுவரை எமக்கு அரச உதவிகளோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோ கிடைக்கப் பெறவில்லை.

வறட்சி, வெள்ளப்பெருக்கு என்பவற்றால் விவசாயிகள் பாதிக்கப்படும் போது அவர்களுக்கு நிவாரணங்கள், உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால் மீனவர்கள் பாதிக்கப்படும் போது உதவிகள், நிவாரணங்கள் வழங்கப்படாது புறக்கணிக்கப் படுகின்றனர் – என்றனர். (ஐ)

## வெள்ளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், வெள்ளத்தில் சிக்கியிருந்த பலர் கடற்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொட்டித் தீர்த்த பெருமழையினால், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல இடங்களில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

வயல் காவலுக்குச் சென்றவர்களும் உதவிப் பணிகளுக்குச் சென்றவர்களும் வீடுகளில் இருந்தவர்களும் வெள்ளத்தில் சிக்கியிருந்தனர்.

வீடுகளுக்குள் இருந்தவர்கள் மீட்கப்பட்ட நிலையில், மரங்களில் ஏறித் தப்பியிருந்த பலரையும் கடற்படையினர் படகுகள் மூலம் மீட்டனர்.

வெள்ளத்தில் சிக்கிய பகுதியில் இருந்து பிறந்து சில நாள்களேயான சிசுவும், தாயும் கடற்படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் உள்ள இடைத்தங்கல் முகாம் மற்றும் முரசுமோட்டை முருகானந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று கலந்துரையாடினார்.

இதன்போதே அந்த மக்கள் மேற்கண்டவாறு கூறினர்.

வெள்ளத்தால் தமது வாழ்வாதாரம் முழுமையாக அழிவடைந்து உள்ளதாகவும், இதனால் எதிர்காலத்தில் தங்களுடைய வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது என்றும் அந்த மக்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

வங்கிகளில் கடன் பெற்று மேற்கொண்டுள்ள காலபோக நெற்செய்கை அழிவடைந்துள்ளது. இதனைவிட வாழ்வதற்காக வழங்கப்பட்ட கால்நடைகள் மற்றும் ஏனைய பொருள்கள் என்பனவும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு உள்ளதாக மக்கள் அங்கு தெரிவித்தனர்.

இந்தப் பாதிப்புகள் தொடர்பில் ஆராயப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார். (ஐ)

## வெள்ளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதற் கட்டமாக பத்தாயிரம் ரூபா வழங்கப்படும் எனப் பொது நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான கூட்டத்தின்போது அமைச்சின் மேலதிக செயலாளர் அமலநாதன் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இடரை எதிர்கொள்ளலாம் என்ற அடிப்படையில் அவர்களுக்குக் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் வெள்ள இடர் காரணமாக வீடுகள் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு முதற் கட்டமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் பின்னர் வீட்டின் சேதம் மதிப்பீடு செய்யப்பட்டு 25லட்சம் ரூபா வரை இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரதீபன் –

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வீடுகள் தற்காலிக வீடுகளே. எனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு தீர்மானித்த தொகையை இழப்பீடாக வழங்கவேண்டும். அதுவே பொருத்தமானது எனத் தெரிவித்தார்.

இது கொள்கை ரீதியாகத் தீர்மானிக்கவேண்டும். இதனை நாடாளுமன்றத்தில்தான் மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## இடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழை காரணமாக பாதிக்கப்பட்டு அங்கு முகாம்களில் தங்கியுள்ள மக்களை இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுக்கான தேவைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடிய அமைச்சர், அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருந்த பாடசாலைகளைச் சென்று பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு விஸ்வமடு பாரதி வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்களை நேற்று சென்று நேரில் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு தேவையான அனைத்துத் தேவைகளையும் செய்து தருவதாக உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சருடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி. சிவமோகன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சர், எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் கண்டிக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்ட அவர், ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கூட்டமைப்பிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எதுவித ஒப்பந்தமும் செய்து கொள்ளப்படவில்லை. இதில் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. எங்களுக்குள் பேச்சுக்கள் இடம்பெற்றன. அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைக் கூறினார்கள். நாம் அதற்கு இணங்கினோம். இது தொடர்பில் எங்கள் தலைவரும் தெளிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார்.

அவர்கள் காணிப் பிரச்சினை, அரசியல் கைதிகளின் பிரச்சினை குறித்து கூறினார்கள். இதற்காக அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க முடியாது. கலந்துரையாடி விடுவிக்கக் கூடியவர்களை விடுவிக்க நாம் எதிர்ப்பார்த்துள்ளோம் – என்றார். (ஐ)

## தேவையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி விடுவிக்கப்பட்டு மக்களுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்படும் எனப் பொது நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற வெள்ள இடர் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வெள்ள இடரால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள் மற்றும் அவசர உதவிகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. மக்களுக்கும் அவர்களின் வாழ்வாதாரத்துக்கும் ஏற்பட்டுள்ள அழிவு தொடர்பில் அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதும் அதற்கான நட்டஈடுகள் வழங்கப்படும். அதற்காகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்கள் கோருகின்ற நிதி விடுவிக்கப்படும்.

இந்த உதவிகள் அனைத்தும் விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் – என்றார். (ஐ)

# நிபந்தனைகளை முன்வைத்தே ஐ.தே.கவுக்கு ஆதரவளித்தோம்

## கூறுகின்றார் சிறிநேசன் எம்.பி.



கொழும்பு, டிசெ. 25

சூழ்ச்சியின் மூலம் அரசைக் கவிழ்ப்பது தவறான நடவடிக்கை என்பதாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை எதிர்த்து, ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவளித்தது என அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிநேசன் தெரிவித்தார்.

அத்தோடு அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கான தீர்வு மற்றும் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு உள்ளிட்ட பல விடயங்களை நிபந்தனைகளாக முன்வைத்தே தாம் ஐ.தேகவுக்கு ஆதரவளித்தார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் எல்லை நகரில் ஒளிவிழா மற்றும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வாதிகாரத்தை விட மக்களின் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும். எமது ஐந்து வருடகால ஆயுள்கொண்ட நாடாளுமன்றத்தைச் சர்வாதிகார அடிப்படையில் கலைக்கின்ற போக்கைத் தோற்கடிக்க சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டோம்.

சூழ்ச்சியின் மூலம் அரசைக் கவிழ்ப்பது தவறான நடவடிக்கை என்பதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை எதிர்த்து. ஜனநாயகத்தை, சட்ட ஆட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்ற அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உச்சக் கட்ட ஆதரவை வழங்கியது.

அத்தோடு காணிகளில 80 சதவீதமானவை விடுவிக்கப்பட்டமை மற்றும் 107 தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தமை போன்ற பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு கடந்த காலங்களில் செய்த நல்லவற்றையும் எம்மால் மறக்க முடியாது.

நிறைவேற்று அதிகாரம் பக்கச் சார்பாகச் செயற்பட்டபோது சட்ட ஆட்சியை நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் நீதித்துறை சுதந்திரமாக – சுயாதீனமாகச் செயற்பட்டதன் காரணமாக ஜனநாயக அடிப்படையில் அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# தேர்தலுக்கு தடையாகவுள்ள பிரச்சினைகளைத் தீருங்கள்!

## கட்சிகளிடம் கோருகின்றார் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர்



கொழும்பு, டிசெ. 25

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தத் தடையாகவுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொள்ளவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைத் தேர்தல்களை முன்னெடுப்பதற்குத் தடையாகவுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு அமைய நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியமாகின்றது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்காக மாகாண சபை தேர்தல் சட்டத்தை அரசியல் கட்சிகள் மாற்ற வேண்டும்.

இதனை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரத்தைப் பெறவேண்டும் – என்றார்.

# மைத்திரியுடன் இணைந்தே பயணிக்கவேண்டியுள்ளது!

## சஜித் பிரேமதாஸ விளக்கம்

கொழும்பு, டிசெ. 25

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியுடன் இணைந்துதான் இந்தப் பத்து மாதங்களும் பயணிக்கவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கொலன்னாவைப் பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய அவர் –

விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டு இனியும் பயணிக்க முடியாது. 10 மாதங்களுக்கு நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியுடன் இணைந்துதான் பயணிக்கவேண்டும்.

எஞ்சியுள்ள காலப்பகுதியில் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்பும் வகையில் தீர்மானம் எடுக்கப்படவேண்டும். மக்களுக்காகவே அரச இயந்திரம் செயற்படவேண்டும்.

எனினும், மக்களுக்குச் சேவையாற்ற முடியாமல் போனால், அனைத்தையும் தூக்கிவீசிவிட்டு வீட்டுக்குச் செல்வேன் – என்றார். (ஐ)

# வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவச் சென்றவர்களுக்கு இடையூறு



கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு

கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கச்சென்ற குழுவினரிடம் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தமை மற்றும் பொருள்களை வழங்கவிடாது தடுத்தமை உள்ளிட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கண்டாவளைப் பிரதேச மக்களுக்கு அந்தப் பகுதி பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளடங்கிய குழு அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் கண்டாவளை மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று முன் தினம் இரவு இந்தக் குழு அத்தியாவசியப் பொருள்களை விநியோகித்துள்ளது.

இதன்போது அங்கு வந்த கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்கள் சிலர் அந்தக் குழுவினரை உணவு வழங்கவிடாது தடுத்து, தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தனர் எனத் தெரியவருகிறது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.கடமைக்கு இடையூறு விளைவித்து பிரதேச செயலக வாகனங்களைத் தடுத்து நிறுத்தியமை தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு எதிராகக்கிளிநொச்சிபொலிஸ்நிலையத்தில் முறைப்பாடுபதிவுசெய்யப்பட்டுள்ளது.

# இரண்டு அமைச்சர்கள் விரைவில் பதவியேற்பு

## அமைச்சர் வஜிர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

அரசமைப்பின்படி அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 என்பது ஜனாதிபதியையும், பிரதமரையும் சேர்க்கப்படாமலேயே பார்க்கப்படவேண்டும் எனவும், இதனால், இன்னும் இருவர் விரைவில் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஹினிதும பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்ட எவரும் இதுவரை கைவிடப்படவில்லை. வேறு கட்சியிலிருந்து வருபவர்களையும் வெளியார் என நாம் கருத்தில் கொள்வதில்லை. குழுக்களை இணைத்துக் கொள்ளாமல் தேர்தலில் வெற்றி பெறுவது என்பது சாத்தியமில்லாத ஒன்று – என்றார். (ஐ)

# கார் விபத்தில் மூவர் காயம்

வவுனியாவிலிருந்து, திருகோணமலை நோக்கி பயணித்து கொண்டிருந்த காரொன்று நேற்று காலை மஹதிவுல்வெவ குளத்திற்கு அருகில் வைத்து விபத்துக்கு உள்ளாகியது.

விபத்தில் காரில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் காயமடைந்துள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கத்தினால் கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.